ஆடவர், வனிதையர்
விரும்பும் அழகு
வண்ணப் புடைவைகளுக்கு
சிறந்த இடம்:
ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-513)

பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5·00

முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளை
தெரிவு செய்திட
இன்றே நாடுங்கள்
ச. லிங்கநாதன்
வண்ணச் சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
[சி-513]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 22 புதன்கிழமை (05 - 04 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 129

# புலிகளுடனான பேச்சுவார்த்தையில் அமைச்சர் கதிர்காமர் முக்கிய பங்கு

## தூதுக்குழுவுக்கு முக்கிய விடயங்கள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம்

கொழும்பு, ஏப்ரல் 5

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள நான்காம் கட்டப் பேச்சுக்களில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் முக்கியபங்கு வகிப்பார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்முறை யாழ். வரும் அரசதரப்புப் பிரதிநிதிகள் குழுவுக்கு மூத்த அமைச்சரான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தலைமைவகிப்பார் என்றும்—

அமைச்சர் கதிர்காமர் அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதில் முக்கிய பங்கு வகிப்பார் என்றும்— கொழும்புப் பத்திரிகைகள் தகவல் வெளியிட்டுள்ளன.

மக்களின் தேவைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் உடனுக்குடன் முடிவு எடுக்கும் அதிகாரம் அமைச்சர்கள் இருவருக்கும் வழங்கப்பட உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

நான்காவது கட்டப் பேச்சுவார்த்தையில் அரச தரப்பில் அமைச்சர்கள் ரத்னசிறி விக்கிரமநாயக்காவும், லக்ஷ்மன் கதிர்காமரும் இடம்பெறுவது அனேகமாக நிச்சயமாகிவிட்டதாக அறியவருகிறது

வடபகுதி மக்களின் தேவைகள் மற்றும் புனரமைப்புப் பணிகள் குறித்து உடன்முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் என்றும—

இது குறித்த பணிப்புரைகளை ஜனாதிபதி அமைச்சர்களுக்கு விடுத்திருப்பதாகவும் —''திவயின'' சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

நான்காம் கட்டப் பேச்சுக்குப் பின்னர் அரசியல் தீர்வு குறித்து தீவிரமாக ஆராயப்படும் என்பதால் —

அரசாங்கக்குழு சில நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் சாத்தியம் உண்டென அந்தப் பத்திரிகை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் நேற்று மழை!

யாழ்ப்பாணம், ஏப். 5

கடந்த பல நாள்களாக நீடித்த கடும் வரட்சியின் பின் வலி. வடக்கு, வலி. மேற்கு மற்றும் குடாநாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் நேற்று மழை பெய்தது.

சண்டிலிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை மற்றும் சுன்னாகம் பகுதியிலும் சுமார் ஒரு மணித்தியாலம் பலத்த மழை பெய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4-135)

கொழும்பிலிருந்து வாராவாரம்

### புற்றுநோய் நிபுணர்கள் யாழ். வந்து திரும்புவர்

கொழும்பு, ஏப். 5

புற்றநோய் சிகிச்சை நிபுணர்கள் கொண்ட குழு ஒன்றை விரைவில் யாழ்ப்பாணம் அனுப்ப சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்தார்.

இந்தக் குழுவுக்கு புற்றநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜெயந்த பாலவர்த்தன தலைமை வகிப்பார்.

இவருடன் டாக்டர் அமிர்தா ஜெயமகா மற்றும் சில டாக்டர்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலமாக வாரத்தில் ஒரு தடவை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி சிகிச்சை அளிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து கொழும்பு செல்லும் புற்றுநோயாளர்கள் பல சிரமங்களை அனுபவிப்பதை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஓ-3]

### பதுளைப் பகுதியிலிருந்து யாழ். வரும் பாதயாத்திரை

கொழும்பு, ஏப். 5

இம்மாத இறுதியில் பதுளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சமாதானப் பாதயாத்திரை ஒன்றை மேற்கொள்ள பதுளை தேசிய இளைஞர் சேவை மன்றம் தீர்மானித்துள்ளது.

பாதயாத்திரையில் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் பங்குபற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பதுளையிலிருந்து ஆரம்பிக்கும் இப்பாதயாத்திரை 21 நாள்களில் 480 மைல் தூரத்தைக் கடந்து யாழ்ப்பாணத்தை வந்தடையும் என ''திவயின'' செய்தி வெளியிட்டுள்ளது. [ஓ-10]

வன்செயல் அரசியலுக்கு திட்டம்:

### ஜே. வி. பி.யினர் குறித்து பொலீஸார் உஷார்நிலை!

கொழும்பு, ஏப். 5

ஜே.வி.பி. வன்செயல் ரீதியான அரசியலுக்கு திட்டம் தீட்டி வருவதாக கிடைத்த தகவல்களை அடுத்து விசேட பொலீஸ் குழுக்கள் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக போதனைகளைக் குழப்பி பல்கலைக்கழக கல்விக்கு தடையேற்படுத்துவது —

கொள்ளைகளை நடத்துவது — போன்ற செயல்களில் ஜே.வி.பி. ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளத்.

ஜே.வி.பி. ஜனநாயக அரசியலுக்கு அப்பால் வன்செயல் ரீதியாக செயற்பட்டால் அதற்கு வழங்க வேண்டிய ''மருந்து'' தங்களிடம் இருப்பதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். [ஓ-3-6]

### செலான் வங்கி கொள்ளை தகவலுக்கு ரூ. 5 லட்சம்

கொழும்பு, ஏப் 5

கொழும்பு முதலிகே மாவத்தையில் ''செலோன்'' வங்கியில் கடந்த 30ம் திகதி நடந்த கொள்ளை தொடர்பாக தகவல் தருவோருக்கு 5 லட்சம் ரூபா சன்மானம் தரப்படும் என்று பொலீஸார் அறிவித்துள்ளனர்.

இந்த வங்கியில் இருந்து ஆயுத முனையில் 65 லட்சம் ரூபா பட்டப்பகலில் கொள்ளையடப்பட்டது தெரிந்ததே

இந்த கொள்ளை தொடர்பாக கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கேடிகள் விசாரணை செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். (இ-3)

### ஜப்பான் விஷவாயு இலங்கைக்கு வந்துள்ளது

கொழும்பு, ஏப்.5

கடந்த மாதம் ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் பாதாள ரயிலில் பாவிக்கப்பட்ட பயங்கர விஷ நுண்ணுயிர் வாயு இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டோக்கியோவில் விஷவாயு தாக்குதலை நடத்திய ஜப்பானிய தீவிரவாத மத அமைப்பான ''ஓம் ஷ்ரீ கியோ'' பிரிவின் கிளை ஒன்று காலியில் இருப்பதாகவும் —

அந்தக் கிளைக்கு டோக்கியோவிலிருந்து விஷவாயு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் ஜப்பானிய அதிகாரிகள் இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளனர்.

இந்தக் கிளை நிறுவனத்துக்கு பெரிய அளவில் நெல் வயல்களும் தேயிலைத் தொழிற்சாலை ஒன்றும் சொந்தமாக இருப்பதை இந்த மத அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் ஜப்பான் பொலீஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

நெல் வயல்களுக்கு உரமாகப் பயன்படுத்துவதற்காக ''பாரின்'' என்ற விஷவாயுப் பொருளை ஸ்ரீலங்காவுக்கு தான் அனுப்பியதாகவும் அச் சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டா-ரட்ணசிறி முறுகல்நிலை தோட்ட தொழிலாளர் விவகாரத்தில்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் இரு அமைச்சர்களான எஸ். தொண்டமானுக்கும், ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுக்கும் இடையில் தோட்டத் தொழிலாளர் விவகாரத்தில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இ. தொ. கா. தலைவரான எஸ். தொண்டமான் தோட்டத் தொழிலாளர் தொடர்பாக தெரிவிக்கும் கருத்துக்களை மதிக்காமை —

தோட்டத்துறை அமைச்சில் உள்ள அதிகாரிகள், இ. தொ. காவுடன் கலந்தாலோசிக்காது முடிவுகளை எடுப்பது —

தோட்ட நிர்வாக மற்றும் குடியேற்ற விடயங்களில் இ. தொ. காவுடன் ஆலோசியாது சுயமாகத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது — போன்ற விடயங்கள் தொடர்பாக அமைச்சர் எஸ். தொண்டமான் தோட்டத் துறை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கு எதிராக அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்

இதனால் இரு அமைச்சர்கள் இடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாட்டை பயன்படுத்தி தொண்டமானை ஐ. தே. கவில் இணைக்க முயற்சி எடுக்கப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஓ-3)

### கொழும்பு சென்ற மலையக அதிபர்கள் பொலீஸாரினால் தடுத்து வைப்பு

மலையகத்தைச் சேர்ந்த நான்கு அதிபர்கள், வெள்ளவத்தை பொலீஸாரினால் சுமார் மூன்று மணி நேரம் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

இந்த நான்கு அதிபர்களும், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெறும் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறிக்கென கொழும்பு சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அட்டன், தலவாகொல்லை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறியில் கலந்து கொள்ள வந்த இந்த நான்கு மலையக அதிபர்களும், தேசிய கல்வி நிறுவனத்துக்குச் சென்று விடுதியில் தங்க அனுமதி கேட்டனர்.

ஆனால் விடுதியில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுவதாக காரணங்காட்டி இவர்களை தங்கவைக்க இயலாது என விடுதி நிர்வாகம் கூறிவிட்டது.

அதையடுத்து வெள்ளவத்தையில் உள்ள தமது நண்பர்களிடம் தங்குவதற்கு ஏற்பாடு செய்யச் சென்றனர்.

அச்சமயம், இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலீஸார் இவர்களை மறித்து வைத்து, சுமார் மூன்று மணி நேரம் வரை விசாரணைகளை மேற்கொண்டனராம். [ஓ-5]

முச்சந்தி முரளி



மந்திரிமார் வருகினமாம்.. சும்மா நீட்டி முழக்கி வந்தா பிரயோசனம் இல்லை பாருங்கோ ...

யாழ். பல்கலைக்கழகத்துக்கு

### பிரிட்டிஷ் அன்பளிப்புக்கள் நேற்று நேரில் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பிரிட்டிஷ் அரசு அன்பளிப்புச் செய்த சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான உதவிப் பொருள்கள் நேற்றுக் காலை யாழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக [illegible] மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த பிரதிநிதியான திரு. கிறிஸ்தோபர் ஹெராஞ் இந்த உதவிப் பொருள்களை நேரில் கையளித்தார்.

1989 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசின் ஓ. டி. ஏ. உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு மினி வான், 35

( ஆம் 8 பக்கம் பார்க்க)

இடையூறு விளைவிக்க முயற்சி:

### 29 தமிழ் எம.பிக்களுக்கும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

#### பொலீஸ் மா அதிபர் உத்தரவு

கொழும்பு, ஏப். 5

29 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்தார்.

அரசுக்கும்—விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறு விளைவிக்கும் நடவடிக்கையில் தீவிரவாத தமிழ்க் குழுவைச் சேர்ந்த சிலர் ஈடுபட்டுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்தே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

உத்தியோகப்பற்றற்ற ரீதியில் அரசதரப்புடன் தொடர்புள்ள சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆபத்து விளைவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-3-6)

ஆயுதங்களுடன் நடமாடுதல்:

### புலிகளின் கோரிக்கையை அரசு ஏற்கமாட்டாதாம்

கொழும்பு, ஏப் 5

கிழக்கு மாகாணத்தில் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளமாட்டாது.

இவ்வாறு அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதே சமயம் அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது புலிகள் இது பற்றி பிரஸ்தாபிப்பார்கள் என்றும் —

கிழக்கு மாகாணத்தில் தங்களை ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்காவிட்டால் ஏனைய இயக்கத்தினரையும் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கக் கூடாது என புலிகள் அரசை வற்புறுத்துவர் என்றும் —

கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது. [ஓ-5]

அலரி மாளிகைச் சம்பவம்:

### படை அதிகாரிகள் இருவர் பொலீஸாரால் கைது

கொழும்பு, ஏப். 5

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வாசஸ்தலமான அலரிமாளிகையில் 24 வயது இளைஞன் ஒருவன் நுழைந்த சம்பவம் தொடர்பாக அங்கு பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த இரு படை அதிகாரிகள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமையல் உதவியாளர் என்ற ''பாஸ்'' பெற்ற இந்த இளைஞன் அலரிமாளிகைக்குள் நுழைந்ததாகவும்—

''லோய்'' என்ற ஒருவரால் இந்த இளைஞன் அலரிமாளிகைக்குள் அனுப்பப்பட்டிருந்ததாகவும்—

விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர். [இ-3]

வடக்கு-கிழக்கில் வழங்கப்பட்ட

### 15 ஆயிரம் நியமனங்கள் ரத்துச் செய்யப்படும்

கொழும்பு, ஏப். 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சுமார் 15 ஆயிரம் அரச நியமனங்களை ரத்துச் செய்து புதிய நியமனங்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'லங்கா தீப' செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு ஆளுநரோ மாகாண அமைச்சரவையோ இல்லாத காலத்தில் இரு அமைச்சுக்களைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த நியமனங்களை வழங்கியதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். [ஓ-3-6]

செங்கலடி பிரதேச சபையின்

### ரெலோ உறுப்பினர் மீது இனந்தெரியாதோர் சூடு!

மட்டக்களப்பு, ஏப் 5

ரெலோ அமைப்பைச் சேர்ந்த முத்துசாமி அனுஷாமூர்த்தி என்பவர் கடந்த சனிக்கிழமை, இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் ஆவார்.

ஏறாவூர், மரப்பாலம் அருகில் உள்ள இராணுவ முகாமுக்குச் சமீபமாக இவரது வீடு அமைந்துள்ளது.

இவரது வீட்டுக்குச் சென்று ''மூர்த்தி அண்ணா'' என்று கூப்பிட்டு அழைத்த சிலர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அச்சமயம் இவரது முதுகில் இரண்டும், கையில் ஒன்றுமாக மூன்று துப்பாக்கிச் சூடுகள் தாக்கின.

இவர் தற்போது மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டிலிப்பாய் சீரணி

அருள்மிகு

**ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**

# வருடாந்த மஹோற்சவம்

கொடியேற்றம் — 06 — 04 — 95
வியாழன் காலை 11 மணி

புதிய சப்பற வெள்ளோட்டம் — 12 — 04 — 95
புதன் மாலை 4 மணி

சப்பறத் திருவிழா — 14 — 04 — 95
வெள்ளி (புது வருஷம்)

தேர்த்திருவிழா — 15 — 04 — 95
சனி காலை 8-30 மணி

தினமும் தெய்வீகப் பேருரை
மாலை 4 30 — 5 30

ரதம் வீதி உலாவரும் காட்சி வர்ணனை

சிவகரசி
திரு. ஆ.பு. திருமுருகன் B. A
(36053)

---

## "பாஞ்சாலி சபதம்"

நாடகம்

இடம்: மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபம்,
காலம்: இன்று (05- 04- 95) புதன்கிழமை
மாலை 4 00 மணியளவில்

பிரவேசம்: மாணவர் ரூ.10/-
ஏனையோர் ரூ. 20/-

இன்ரறக்ட் கழகம்
(36057) மானிப்பாய் மகளிர் கல்லூரி

---

# நிர்மாணி

## நிர்மாணத் துறைசார் இதழ் மாதாந்த வெளியீடு

விரைவில் வெளிவரவுள்ள நிர்மாண துறைசார்ந்த மாதாந்த சஞ்சிகைக்கு தங்களின் பொறியியல் துறை சார்ந்த ஆக்கங்களை அனுப்பிவைக்கவும். இத் துறையில் ஈடுபடுவோர் தமது சேவைகளை விளம்பரப் படுத்த விரும்பின் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முதல் இதழ் வருடப்பிறப்போடு வெளிவரவுள்ளது. இதில் பின்வரும் கட்டுரைகள் அடங்கும்.

- புனரமைப்பு வேலைகளும் போக்குவரத்து தடைகளும்
- நிர்மாண துறையும் இன்றைய நிலையும்
- மேல் செலவுகளும் மதிப்பீடும்
- கிளிநொச்சி நகர் திட்டமிடல் - நோக்கு
- 1000 வீட்டுத்திட்டம் - வன்னிமாவட்டம்
- வேலை மேற்கொள்வோர் பதிவுகள்
- அபிப்பிராயக் கடிதங்கள்
- செய்திகள்

உங்கள் பிரதியை உறுதிப்படுத்துவதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்

வெளியிடுவோர்:

பொறியியல்துறை,
**தமிழீழ நிர்வாக சேவை,**
நடுவப் பணியகம்,
தமிழீழம்.

[சி 898]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மறைவு: 06 — 03 — 1995

திதி: 05 — 04 — 1995

### அமரர் வல்லிபுரம் தம்பையா

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் ஒளிவிட்டு இறைவனடியில் 06—03—1995 இல் சேர்ந்துவிட்ட எங்கள் அன்பு தெய்வத்தினை 31ஆம் நாள் நினைவஞ்சலியை முன்னிட்டு இன்று (05 — 04 — 1905) புதன்கிழமை காலை 10 மணியில் இருந்து நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி சர்வானந்தராசா
திரு திருமதி சுந்தரலிங்கமும்
பேரப்பிள்ளைகளும்

நல்லூர்,
யாழ்ப்பாணம். [36051]

---

இணுவில்

ஸ்ரீ செகராஜசேகரப் பிள்ளையார் கோவில்

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

கொடியேற்றம்:- இன்று [5.4.95] நண்பகல் 12 மணி

தினமும்

## சிறப்புத் தொடர் சொற்பொழிவு

இரவு — 8 30 — 9.30 மணி வரை

★ "ஸ்ரீ விநாயக புராணம்" ★

வழங்குபவர்:- "சிவநெறித் தொண்டன்"
திரு. செ. சத்தியமூர்த்தி பி. எஸ். ஸி.

தலைவர்:- கலாநிதி சபா ஜெயராசா

ஆலய பிரதம குரு:- சிவஸ்ரீ இராமஸ்கந்தராசா குருக்கள்

இங்ஙனம்
திருவிழா உபயகாரர்

பரிபாலகர்
சி சின்னத்துரை [36059]

---

நல்லூர் மூத்தவிநாயகர் தேவஸ்தானத்திற்கு

## குருக்கள் தேவை

நல்லூர் மூத்தவிநாயகர் தேவஸ்தானத்திற்கு நித்திய, நைமித்திய பூசைகளையும், ஊர் புரோகிதங்களையும் நடத்தக்கூடியவராகவும் அந்தணராகவும் ஆசார சீலராகவும் இருக்கக்கூடிய ஓர் குருக்கள் தேவை தகுதியுடையோர் 15-04-1995க்கு முன் நற்சாட்சிப்பத்திரமுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்

(சம்பளம் முதலியன நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஆலயத்திற்கு அருகில் குருக்களுக்கு உரிய வீடும் உண்டு )

இங்ஙனம்
கா. இராசரெத்தினம்
தர்மகர்த்தா சபை தலைவர்

இல 101 கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (36048)

---

# துணிப் பூங்கா

வழங்கும்

## புதுவருட மலிவு விற்பனை

| | |
|---|---|
| டொட்ஸ் துணிகள் | 44'' |
| சனபயர் துணிகள் | 44'' |
| பலஸ் துணிகள் | 44'' |
| ஸ்ரைப் துணிகள் | 44'' |
| ரீஜின் சூட்டிங் துணிகள் | 44'' |

**05 - 04 - 1995** முதல்
**10 - 04 - 1995** வரை மட்டுமே
நடைபெறும் என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

மலிவிற்கும் தெரிவிற்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

**துணிப் பூங்கா**

158, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

[சி-957]

---

உ
சிவமயம்

## ★ அன்பு ததும்பும் அழைப்பு ★



அன்புடையீர்,

றோயல் இண்டஸ்றிஸ் ஸ்தாபனத்தின்
மொத்த விற்பனை நிலையத்

★ திறப்பு விழா ★

வர்த்தகப் பெருமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு எமது நிறுவனம்

# சிவா நறுமணப் பூங்கா

288, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இன்று (05-04-95) புதன்கிழமை காலை 8-36 மணி முதல் 10-17 மணி வரை வரும் சுபவேளையில் திறந்து வைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

எமது தயாரிப்புக்கள் மட்டுமல்ல வெளிநாட்டு நறுமண தயாரிப்புப் பொருள்களையும் நியாய விலையில் வழங்குகின்றோம்.

உங்கள் தரிசனத்திற்காக அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

சிவா நறுமணப் பூங்கா நிறுவனத்தினர்
288, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

(சி 900)

---

## பாடசாலைகளில்

மிருசுவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதன்கிழமை பி. ப. 2-00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் ஐ. வரதராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்டப் பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்துகொள்ளவார் (117)

★ ★ ★

இணுவில் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. சு. தம்பித்துரை தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வலி-கிழக்கு பிரதேசசபை கணக்காளர் திரு. மு. விஜயரகுநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

சங்கானை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான வினா விடைப் போட்டி நாளை வியாழக்கிழமை சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் நடைபெறும். [ஓ-135]

★ ★ ★

சங்கானை கல்விக் கோட்ட பிரிவுபாடசாலைகளைசேர்ந்த ஆண்டு3, தொடக்கம் ஆண்டு 8 வரையுள்ள மாணவர்களுக்கான தையல் போட்டி சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியால்ய மண்டபத்தில் இன்று புதன்கிழமை நடைபெறும். [ஓ-135]

---

# DAY CLASS

# O/L

**MATHS.**

ஆரம்பம்
10 - 4 - 95
Mon 8 00 A.M.
[94 பரீட்சை எடுத்த மாணவர்கட்குரியது]

**SHAMROCK**
யாழ். சுண்டுக்குளி.
(36058)

---

# A/L 95 - 96

நாடகமும்,
அரங்கியலும்

குழந்தை
சண்முகலிங்கம்

ஆரம்பம்:
**08-04-1995**
புதிய
**உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-961)

---

# சிறுமியின் மரணத்துக்கு ரூ. $2\frac{1}{2}$ லட்சம் நஷ்டஈடு

கொழும்பு, ஏப். 5

கொழும்பு ஆஸ்பத்திரிவிபத்துப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட சிறுமி மரணமான சம்பவம் குறித்து நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அரசுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டு நஷ்டஈடு வழங்க பணிக்கப்பட்டது.

1992 ஆம் ஆண்டு நுகேகொடையில் நடந்த விபத்து ஒன்றில் காயமடைந்த நிலுாஷி தக்ஸலா (10வயது) என்ற சிறுமி கொழும்பு ஆஸ்பத்திரி விபத்துப் பிரிவில் சேர்க்கப்பட்டதாகவும்— வைத்தியசாலை நிர்வாகத்தின் அக்கறையின்மையால் அந்தச் சிறுமி இறந்ததாகவும்—தெரிவித்து சிறுமியின் மரணத்துக்கு நஷ்டஈடுகோரி அந்தச் சிறுமியின் பெற்றோர் கொழும்பு நீதிமன்றில்வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிபதி சோமவன்ச, சிறுமியின் பெற்றோருக்கு 2 லட்சத்து50 ஆயிரம் நஷ்டஈடுவழங்க உத்தரவிட்டார்.

சிறுமியின் மரணத்துக்கு அரசு பொறுப்பேற்கவேண்டும் என்றும் அந்தத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

---

## தவறிவிட்டது

கைச்சங்கிலி ஒன்று கட்டப்பிராய் 3ம் கட்டைக்கும், கல்வியங்காடு சந்தைக்கும் இடையில் 3-4-95 அன்று காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இ. மகாதேவன்

3ம், கட்டை,
கல்வியங்காடு. [36056]

---

யா/விக்ரோறியாக் கல்லூரி

## வணிகத் துளிர்

# வெளியீட்டு விழா

றிட்ஜ்வே மண்டபம்
05 – 04 – 95 புதன் காலை 9 மணி

வரவேற்புரை: செல்வி ந. ஜெகதீஸ்வரி

தலைமையுரை: செல்வன் தா. தவமன்னன்

தொடக்கவுரை: திரு. கா. சந்திரபாலன் [கல்லூரி அதிபர்]

ஆசியுரை: திருமதி ஏ.என். கிருஷ்ணவேணி [விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்]

வெளியீட்டுரை: திரு. M. குலசேகரம் [பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி]

பிரதம விருந்தினர்: திரு. க. தேவராஜா [சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்]

சிறப்பு விருந்தினர்: திரு. ப. விக்கினேஸ்வரன் [பி. க. ப. சங்கானைக் கோட்டம்]

திரு. வரதராஜா [வர்த்தக கல்வி அதிகாரி வலயம் 2]

முதற்பிரதி பெறுபவர்: திரு.துரைசிங்கம் றது

அறிமுகவுரை: திரு. மா. சின்னத்தம்பி [விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்]

வாழ்த்துபவர்கள்,
**முன்னாள் வணிக மாணவர்கள்**
[சி-902]

---

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## இல்ல விளையாட்டுப் போட்டி

6 - 4 - 95 வியாழக்கிழமை நடைபெற இருந்த மேற்படி விளையாட்டுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

– அதிபர் –

[சி/901]

---

## காணவில்லை



**ம. வேலு**

**சம்பந்தன் வைத்திய ஆலோசனை நிலையம்**

இலங்கை வங்கிக்கு அருகில்
574/1, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

வேலு என்று அழைக்கப்படும் இவரை 3-3-1995 மாலை 4. 00 மணி முதல் காணவில்லை. இவர் சாறமும் சேட்டும் அணிந்திருந்தார், இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் அறிந்தவர்கள் மேற்படி விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். இவரைக் கண்டு கொள்ள உதவுபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

தகவல்
இ. நடராசா
(36055)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் மேற்கு

# கந்தர்வளவு ஸ்ரீமகாகணபதிப் பிள்ளையார் கோயில் காளி கோயில்

## புனராவர்த்தன உத்தம யாக நவகுண்ட பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்

05 - 04 - 1995

## ஆசியுரைகள்

அருளோங்கும் சைவமெய்யன்பர்களே!

கோண்டாவில் ஸ்ரீமகாகணபதிப்பிள்ளையார் கோயில் மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் கண்டு பெருமகிழ்ச்சி. பிரணவசொரூபியான விநாயகப் பெருமானுக்கு நாம் ஆற்றும் கைங்கரியங்களெல்லாம் அதி உயர் ஸ்தானம் வகிப்பன. முதலில் அவரை வணங்காது நாம் எக்காரியமும் செய்வதில்லை. மிக எளிய முறையில் வழிபடப்படுபவரும் அவரே.

அவரைக் குறிக்க ஒரு மஞ்சள் உருண்டை கோமய உருண்டை போதும். நாம் செய்யும் பிழைகளை எல்லாம் பொறுத்துத் திருவருள் பாலிக்கும் கருணாமூர்த்தி அவர். அவரின் திருவடிகளை திரிகரணசுத்தியோடு இறுகப் பற்றிக் கொண்டால் நாம் வேண்டுவனவெல்லாம் ஈந்து அருளுவார். அனுபவத்தால் உணர வேண்டிய உண்மை இது.

பன்னிருவருடங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படும் இப்பெருவிழாவை தரிசிக்கும் பாக்கியம் தவமுடையார்க்கே உண்டு. இவ்விழா சிறப்புற நிறைவுறத் தொண்டுகள் புரியும் அன்பர்களைப் பாராட்டி விநாயகப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்குகிறோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
குருமஹா சந்நிதானம்
நல்லை ஆதீனம்.

## ஆலயப் பிரதமகுரு

திருச்சிற்றம்பலம்
வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்— மாமலராள்
நோக்குண்டாம் மேனினுடங்காது— பூக்கொண்டு
துப்பார்த் திருமேனி தும்பிக்கையான்— பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு
திருச்சிற்றம்பலம்

ஈழத்தின் வடபால் சைவமும் தமிழும் மணங்கமழும் கோண்டாவில் கந்தர்,வளவு என்னும் திவ்விய திருப்பதியில் கோயில் கொண்டருளிய அடியார்கள் வினைதீர்க்கும் பிரணஸ்வரூபி ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையாருக்கும் அன்னை பராசக்தி தான்தோன்றியாக எழுந்தருளும் காளித்தாய்க்கும் நிகழும் பவ வருடம் பங்குனித் திங்கள் 22 ஆம் நாள் புதன்கிழமை காலை 8 – 36 தொடக்கம் 10 - 17 மணிவரையுள்ள இடபலக்கின சுப நேரத்தில் எம்பெருமான் திருவருளினால் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இக் கும்பாபிஷேகம் இறைவனின் ஒன்பது பேதங்களான பிரம்ம, விஷ்ணு உருத்திர, மகேஸ்வர, சதாசிவ, நாதம், பிந்து, சக்தி சிவம் என்னும் மூர்த்தி பேதங்களாக ஒன்பது குண்டங்களோடு உத்தம பக்ஷ கும்பாபிஷேகமாக நடைபெறுகிறது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 01-04-95 தொடக்கம் கிரியைகள் நடைபெகின்றன. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேகத்தை தரிசிப்பதால் சகல பாவங்களும் நீங்கி எம்பெருமான் திருவருள் கூடும் என ஆகமங்கள் கூறுகின்றன. அடியார்கள் யாவரும் இக்கும்பாபிஷேகத்தை தரிசித்து விநாயகப் பெருமானினதும் காளிதாயினதும் திருவருளைப் பெறுவதோடு, தமிழீழ மக்கள் அனைவரும் அமைதியுடனும், தர்மத்தினுடனும் சுபீட்சமாக வாழவிநாயகப் பெருமானின் திருத்தாள் பணிந்து ஆசிகூறுகின்றேன்.

சர்வே ஜனா சுகினோ பவந்து

*பிரதிஷ்ட பிரதம குரு*
''சிவாகம கிரியா ஜோதி''
**சிவகுமார ராஜக் குருக்கள்**
(ஆலயப் பிரதமகுரு)

## துர்க்கா துரந்தரி

கோண்டாவில்பதியை திருவருள் மகிமைக்குள்ளாக்கும் ஆலயங்களில் அன்னை காளிதேவியின் ஆலயமும் பெருமைக்குரியது. ஞானசொரூபியாக விளங்கும் காளி அம்பாளுக்கு குடமுழுக்கு விழா நடைபெறுவது நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மையை விளைவிக்கும் புண்ணிய நிகழ்வாகும்.

இறைபணி செய்யும் வாய்ப்பு எத்தனையோ பிறவிகளில் ஈட்டிய புண்ணியத்தால் கிடைப்பதாகும். இது ஒன்றே மனக்கவலையை மாற்றும் திருப்பணியாகும்.

அம்பாள் எமக்கெல்லாம் வாழ்வும், வளமும் வழங்குபவள். இந்த உலக வாழ்வே அவள் படைத்த காவியமாகும். இதில் நடிப்பவர்கள் நாங்கள். இயக்குபவள் அவள். ஆனால் நாம் வேண்டி நிற்பது எல்லாம் எம்மை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வாழவைக்கவேண்டும் என்பதே.

எனவே ''அம்பிகையைச் சரண் புகுந்து அதிக வரம் பெறுவோம்'' என்ற நிலையில் காளிதேவியை வழிபட்டு குடமுழுக்குத் தரிசனத்தால் மேலும் அமைதி பெற்று ஆனந்தம் அடைவோமாக.

**தங்கம்மா அப்பாக்குட்டி,**
*தலைவர்,*
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
(விளம்பர இல; சி-887)

# தாயும் தனயனும் அருகருகே இருந்து

# அடியார் குறைதீர்க்கும் திருத்தலம்

*மூலமூர்த்தியாக மகா கணபதியும், அவனருகே தான்தோன்றிக் கல்லில் காளி அம்பாளும் தாயும், தனயனுமாக அருகருகே எழுந்தருளி அடியார்களின் இடர்தீர்த்து அருள் பாலிப்பது இவ்வாலயத்தின் சிறப்பு அம்சமாகும்.*

இலங்கைத் தீவின் வடபால், செந்தமிழும், சைவமும், இந்து கலாசாரமும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் மத்தியில், சகல சிறப்புக்களையும், வளங்களையும் கொண்ட கோண்டாவில் கிராமத்தில் மகா கணபதியை ஆதிமூலமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் இவ் ஆலயத்தில் விநா



யகப்பெருமான் தன்னருகே தான்தோன்றித் தெய்வமாகிய காளித்தாயுடன் ஏனைய பரிவாரமூர்த்திகளுடனும் எழுந்தருளி அருள் பாலித்துவருகின்றார். இந்த சிறப்புமிக்க ஆலயம் புனராவர்த்தனம் செய்யப்பட்டுள்ளது. நிகழும் மங்களகரமான பவ வருடம் பங்குனித்திங்கள் 22ஆம் நாள் (5 – 4 – 1995) புதன்கிழமை, அதாவது இன்று ரோகிணி நட்சத்திரமும் பஞ்சமித்திதியும் கூடிய சுபதினத்தில், காலை 8-36 மணிமுதல் 10-17 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில், எல்லாம்வல்ல மகாகணபதிக்கும், காளித்தாய்க்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையொட்டி இந்தச் சிறப்புமலர் வெளியிடப்படுகின்றது.

கோண்டாவில் பரந்த பெரும் நிலப்பரப்பையும், அடர்த்தியான குடிசனச் செறிவையும் கொண்ட கிராமமாகும். இப்பகுதி மக்கள் சைவர்களாகவும், கடவுள் பக்தி நிறைந்தவர்களாகவும் காணப்படுகிறார்கள். இந்தப் பரந்த கிராமம் கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் வடக்கு என மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது. இங்கே மஹோற்சவங்கள், அதாவது தேர்த்திருவிழா நடைபெறுகின்ற, ஒன்பது ஆலயங்கள் உள்ளன. இவை மட்டுமன்றி, வேறுபல சிறிய கோயில்களும் அமைந்துள்ளன. இவ்வளவு சிறப்புக்களைக் கொண்ட கோண்டாவில் கிராமத்தின் மேற்குப் பகுதியில், யாழ்ப்பாணம் — காங்கேசன்துறை பிரதான வீதியில் 4 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கோண்டாவில் மேற்கு உப்புமடம் சந்தியில் இருந்து செல்லும் கோண்டாவில் புகையிரத நிலைய வீதியில் 300 மீற்றர் தூரத்தில் கந்தர் வளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இந்த ஆலய சுற்றாடலில் கல்விமான்களும், நாதஸ்வர தவில் இசைக் கலைஞர்களும் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவ்வாலயம் உருவாக்கப்பட்ட சரியான காலத்தை எம்மால் கண்டுகொள்ளமுடியவில்லை. அதற்கான ஆதாரங்

**கு. சண்முகலிங்கம்**
*செயலாளர்,*
ஆலயபரிபாலனசபை

களும் இல்லை. ஆனால் எமது மூதாதையர்களின் கூற்றுகளின் படி, பன்னெடுங் காலமாக எமது மூதாதையர்கள் இவ் ஆலயத்தை வழிபட்டு வருகின்றார்கள்.

### தான்தோன்றிக்கல்லும் காளித்தாயும்

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த கந்தர் என்பவருக்கு சொந்தமான வளந்தான் புலம் என்ற காணியில் உள்ள தான்தோன்றிக்கல்லில் எழுந்தருளியிருக்கும் காளியம்பாளை எமது மூதாதையர்கள் பன்நெடுங்காலத்தொட்டு வழிபாடு செய்துவந்தனர். ஆரம்ப காலத்தில் வருடத்தில் ஒரு பொங்கலும் மாசி மாதத்தில் வரும் மகாசிவராத்திரிக்கு மறுநாள் குளிர்த்தியும் நடைபெற்று வருவது வழக்கமாக இருந்து வந்தது. இதன் பிறகு இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னதாக, கந்தர் என்பவர் தனக்குச் சொந்தமான வளந்தான் புலம் என்ற அதேகாணியில் தான்தோன்றித் தெய்வமாகிய காளித்தாய்க்கு அருகில் பொதுமக்களின் உதவியுடன் நடராசப்பிள்ளையாரை பிரதிஷ்டை செய்வித்தார். ஆரம்பத்தில், காளி அம்பாள் வீற்றிருக்கின்ற தான்தோன்றிக்கல்லுக்கு சிறிய கட்டடம்கூட கட்டப்படாத நிலையில் வெறும் தரையில் எமது மூதாதையர்கள் வழிபட்டு வந்தனர். நடராசப்பிள்ளையர் பிரதிஷ்டை செய்ததின் பிற்பாடு காளி அம்பாளுக்கும், பிள்ளையாருக்கும் சிறிய ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தனர்.

1959ஆம் ஆண்டளவில் நடராசப்பிள்ளையார் விக்கிரகத்தில் சிறுசேதம் ஏற்பட்டிருந்தமையால், மூலஸ்தானத்தில் மகாகணபதிப் பிள்ளையாரை பிரதிஷ்டை செய்து தற்பொழுது மூலஸ்தான மூர்த்தியாக மகாகணபதியே எழுந்தருளியுள்ளார். கந்தர் என்பவருக்கு சொந்தமான வளந்தான் புலம் என்ற காணி நாளடைவில் கந்தர் வளவு என அழைக்கப்பட்டது. அதன் பிரகாரமே தற்பொழுது இவ்வாலயம் கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோயில் என பெயர் பெற்றது. மகாகணபதி மூலமூர்த்தியாக இருந்தாலும், அதன் அருகே தான்தோன்றிக்கல்லில் காளித்தாய் அருள் பாலித்து வருவது சிறப்புமிக்க அம்சமாகும். இதன் காரணமாக இக்கோயிலை காளி கோயில் என்றும் அழைப்பர். காளித்தாயின் மீது எமது பகுதியிலுள்ள சிறுவர்கள் தொடக்கம் வயோதிபர்கள் வரை மிகவும் பக்தியும், நம்பிக்கையும் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் வேண்டுகின்ற நேர்த்திகள் அத்தனையும் நல்ல பலன்களை அளிக்கின்றன. இதன் காரணமாக காளிவழிபாடு இப்பகுதியில் பிரபல்யமாக இருந்துவருகின்றது.

### 1956இல் கும்பாபிஷேகம்

இவ்வாலயம் 1950ஆம் ஆண்டின் பின்னர், வளர்ச்சி பெற்றுக்கொண்டு வந்தது. எமது பகுதியைச் சேர்ந்த பொன்னம்மாக்கா என்னும், செல்லையா பொன்னம்மா என்பவரினால் பொதுமக்களின் உதவியுடன் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் விக்கி



கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டதன் பிற்பாடே ஆலயம் பல முன்னேற்றங்களைக்கண்டது. இதன் காரணமாக 1956ஆம் ஆண்டளவில் ஆலயம் கட்டப்பட்டு முதன்முறையாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 1957 ஆம் ஆண்டளவில் முதன்முறையாக கொடியேற்றம் நடைபெற்று தற்பொழுது தொடர்ச்சியாக வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது.

### சித்திரத் தேர்

இவ்வாறு மஹோற்சவங்கள், ஏனைய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றுவருகின்ற காலங்களில் 1970ஆம் ஆண்டு ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டு மூன்று தளங்கள் கொண்ட மண்டபங்கள் அமைக்கப்பட்டு 1980ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பொதுமக்களின் அயராத உழைப்பினால் மகாகணபதிக்கு பல லட்சம் ரூபா செலவில் சித்திரதேர் அமைத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| அதிகாலை | 5-00 | மணி | — | புண்யாவாசனம், யாகபூசை, ஏனைய கிரியைகள் |
| காலை | 8-45 | மணி | — | ஸ்தூபிகள் அபிஷேகம் |
| காலை | 10 00 | மணி | — | மூலமூர்த்திக்கு மகாகும்பாபிஷேகம் |
| காலை | 10-10 | மணி | — | பரிவாரமூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் |
| காலை | 10-30 | மணி | — | ஆசியுரைகள் |

**பகல் அன்னதானம் நடைபெறும்**

| | | | | |
|---|---|---|---|---|
| மாலை | 5-30 | மணி | — | விஷேச பூசை |
| | 6-00 | மணி | — | பஞ்சமுகார்ச்சனை, தீபசமர்ப்பணம் |
| இரவு | 7-00 | மணி | — | சுவாமி திருவீதியுலா |
| இரவு | 8-00 | மணி | — | திரு. இ. ஜெயராஜ் (அமைப்பாளர் கம்பன் கழகம்) |

அவர்களால் கும்பாபிஷேகத்தின் மகிமை பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்படும்

| | | | | |
|---|---|---|---|---|
| இரவு | 9-30 | மணி | — | வில்லிசை |

கலாவிநோதன் சின்னமணிகுழுவினர்
**''பேய்வடிவங்கேட்ட பெண்''**

ஈழத்து பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் விஷேச கச்சேரிகள் நடைபெறும்.

ஒருங்கமைப்பு:
V.K. கானமூர்த்தி–பஞ்சமூர்த்தி சகோதரர்கள்

—ஆலயபரிபாலன சபை


மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்

**நிரு ரியூசன் சென்ரர்**

கோண்டாவில்


## ஆசியுரை

தியாக புருஷர்கள் பலரை தன்னகத்தே கொண்டு விளங்கும் ஈழத்தின் வடபால்கோண்டாவில் கந்தர்வளவில் கோயில் கொண்டருளி அடியார்கள் வினைதீர்க்கும ஸ்ரீ மகா கணபதி பிள்ளையாருக்கும் ஸ்வயம்பு மூர்த்தியான காளித்தாய்க்கும் பங்குனி 21 அதிகாலை கோதூளிகாலக்கினத்தில் ஸ்தூபி, தீப,யந்திர பிம்பஸ்தாபனமும், பங்குனி 22 புதன்கிழமை (5– 4 – 95) சுப நேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

ஆவர்த்தனம், அனாவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரீதம் எனும் நால்வகை பிரதிஷ்டைகளில் இந்த புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இக் கும்பாபிஷேகத்தின் மூலம் ஆலயமும், ஆலயத்தைச் சார்ந்த மக்களும், பரந்து விரிந்து வாழும் தமிழ் மக்கள் யாவரும் காளித்தாயின் வீரம் பெற்று, விநாயகப் பெருமானின் திருவருளால் எடுக்கின்ற காரியங்கள் யாவும் விக்னமின்றி வெற்றி பெற்று, தமிழ்த்தாயின் அன்பு மக்கள் அனைவரும் நீடுழி வாழ குருநாதர் ஆகிய கைலை நாதனை பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

*சர்வபோதகர்*
''ஆகமப் பிரவீணா''
சிவஸ்ரீ கைலை
**வாமதேவக்குருக்கள்**
[நயினை]

## வாழ்த்துரைகள்

அகிலம் முழுதாளும் எம்மன்னை பராசக்தி. அவள் சிவத்துடன் சுடரிற் சூடுபோல் இரண்டறக் கலந்தவள். தத்துவங் கடந்து கற்பனைக்கெட்டாது நிற்கும் அச்சிவத்தை தன் தாய்க்கருணையினால் ஆன்மாக்களுக்காக தத்துவத்திற்கும் கற்பனைக்கும் உட்படுத்தி அழைத்து வருபவள். மாயாசக்தியாய் நின்று நமக்கு தனு கரண புவன போகங்களைத் தந்து நம் வினை நீக்கி பின் சிவசக்தியாய் ஐயன் அடி சார்விப்பவள். அத்தகைய அன்னை துஷ்டரையழித்து சிட்டருக்கருள் செய்ய மறக்கருணை பூண்டு காளியாய் உருவெடுக்கின்றாள்.

அத்தகைய பேரரசி பிரணவப் பொருளாக விளங்கும் தன் மைந்தன் கணபதியோடுவீற்றிருந்து பேரருள் செய்யும் பெரும்பதி கோண்டாவில். இறைபக்தி மிக்க கோண்டாவில் மக்கள் அன்னை மாகாளியை இன்று கும்பாபிஷேகம் கிரியைகளால் ஆவாகித்து அருள் பெற விழைகிறார்கள். அன்பிற்கு ஆட்படும் அன்னை அத்தனையும் கொடுப்பாள். முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளால் எண்ணம் சிறக்கும். ஏற்றமுறும் கோண்டாவில்; திண்ணமிது.

அருள் சுரக்கத் திருவருளைப் பணிகின்றேன்.

அன்பன்
**இ. ஜெயராஜ்**
அமைப்பாளர், கம்பன்கழகம்

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவில் கோயில் கொண்டருளியிருக்கும் மகா கணபதிப் பிள்ளையாருக்கு புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நிகழவிருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். நைமித்திய பூசைகளில் ஏற்படும் தவறுகளை நீக்கவும் ஆலயத்தில் சாந்நித்தியம் நின்று நிலவவும் காலத்துக்குக் காலம் கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

எங்கும் நிறைந்திருக்கும் எம்பெருமானை நேரில் அழைப்பது போன்று பாவனை செய்து வேண்டிய உபசாரங்களும் பூசைகளும் செய்து பக்திப் பிரவாகத்துடன் வணங்கி மகிழ்வதே கும்பாபிஷேகக் கிரியையின் சிறப்பம்சமாகும். இவ்வாறு செய்யும் போது எம்பெருமானின் திருவருள் எங்கும் பரவி எல்லோர்க்கும் சாந்தியும் மகிழ்ச்சியும் உண்டாகின்றது.

இந்த இன்பமான தெய்வீக அனுபவத்தை எல்லாம் வல்ல மகா கணபதிப் பிள்ளையார் எல்லோருக்கும் அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**ஆ. மகாலிங்கம்**
பிரதேச செயலர், உடுவில்.

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று (05 - 04 – 1995) இல் நடைபெறுகின்றது.

ஸ்ரீமகாகணபதிப்பிள்ளையாரும் அன்னை காளிதேவியும் அருளாட்சி பெற்று சிறப்புற விளங்குவது இக்கோயிலாகும் தன்னை நாடி வரும் பக்தர்களின் இடர்களையும் பரம் பொருளுக்கு அடியார் பெருமக்களின் நன் முயற்சியால் மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவது மகிழ்ச்சி தருவதாகும். எல்லாம் வல்ல ஸ்ரீமகாகணபதிப்பிள்ளையார் எல்லோருக்கும் அருள் பாலிக்க பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

செல்வி
**பாக்கியலட்சுமி மார்க்கண்டு,**
*அதிபர்,*
யா/கோண்டாவில் இந்து ம. வி.

இவ்வாலயத்தின் மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஆலயத்தை மிகவும் குறுகிய காலத்தில் புனரமைப்பதற்கு சகல அடியார்களும் தங்களது ஒத்துழைப்பை எமக்கு வழங்கியுள்ளார்கள். உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினால்தான் இவ்வாலயம் துரித வளர்ச்சியடைந்தது. உங்கள் அனைவருக்கும் எம் பெருமான் சகல வல்லமைகளையும் அளிக்கவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**அ. இராசையா**
*தலைவர்*
ஆலய பரிபாலனசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்வீரர் அமரர் இராமுப்பிள்ளை

## உள்ள மலர் சொரிந்தோம்

கள்ளமிலா நெஞ்சக் கனிவோடு கருணையும்
சேர் உள்ளம் எம்மனதில் பாகாய் இனிக்கிறது
அள்ளிச் சொரிந்த பாலொடு ஆடலுமாய்
உள்ளம் திறந்த உரிமையுடன் பேரறிவை
மெள்ள எம்மருகில் இருந்து அளித்திட்ட
நல் மனிதப் பண்புதனை நாவினாலே மட்டும்
சொல்ல முடியாது மொழிவற்றி நிற்கின்றோம்
துள்ளும் இளங்கன்றாய் மூப்பு வர முன்னே
தளராத பணி செய்து தள்ளாத வயதான
வெள்ளை மனமுடைய சிவானந்த நல் ஆசான்
பள்ளி கொண்டார் ஒருபோதும் மீளாத
பேருறக்கம் கொண்டாலும் அகலார் எம் மனதினிலே
உள்ள மலர்களை உவந்தளித்து ஒரு நிமிடம்
உன்னத நினைவுடனே அஞ்சலித்தோம் -
அமைதி கொள்க

- செஞ்சோலை.

## கண்திறந்த நற்கலைஞனே

சின்னச்சின்னப் பூக்களின் சோலையை
தேடிவந்து பல் நூறு பணிகளை
தன்முதுகில் தாங்கிய அறிஞனே!
தமிழ்தேசம் விடிந்திடும் போதினில்
உன்பெயரினை எங்களின் தாயகம்
உச்சரித்திடும்; கல்விசார் புலத்திலே
கண்திறந்த நற் கலைஞனே! இன்று நீ
கண்கலங்கிட விட்டுயெங் கேகினாய்?

காந்தரூபன் அறிவுச் சோலையின்
காலையே! எம் கைகளைப் பற்றியே
வாஞ்சையோடு எம்மைத் தழுவிய
வசந்தகால தென்றலே எங்களை
தாங்கியே நடந்திட்ட பனிதனே!
தாங்கிடா துயர்தந்து பிரிவிலே
ஏங்கிட எமைவிட்டுப் பிரிந்தனை
இதய அஞ்சலி தந்தனம் சென்றுவா-

- காந்தரூபன் அறிவுச்சோலை

## நெருநல் இருந்த சிவா

மாணவர் எங்கள் மகிமையை உயர்த்திட
ஆன பணிகள் அயரா தியற்றிப்
பேணி எம்மவர் பெருமையை நிறுத்த(த்)
தானாய் வந்து தளரா முயற்சியில்
கல்விப் பணியில் கருத்தொரு மித்துப்
பல்வித மான துறையெலாம் வளர
அல்லும் பகலும் அனைத்தும் செய்தவர்
வெல்லும் வகையில் சாதனை புரிந்தவர்
நெருநல இருந்த சிவா னந்தர்
பிரிவு உற்றார் என்ற செய்தி
எம்மை வருத்தி ஏங்க வைத்தது
இம்மை வாழ்வை இவர்நீத் தாலும்
செம்மை ஆன அவர்தம் பணிகள்
மும்மைப் போதும் முழுதாய்ப் பெருகும்
அன்னார் குடும்பம் ஆறுதல் பெறவும்
மண்ணில் அவர்செயல் மாண்புற நிலைக்கவுந்
இந்நாள் எங்கள் கல்வி வளரவும்
எல்லா வளமும் பெருகவும் சிறக்கவும்
முயற்சியில் முனைந்து அயற்சி யிலாது
உயர்ச்சி அடைய உழைப்போம் உறுதி

விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு,
தமிழீழம்.

## செயலூக்கம் பெறுவோம்

கல்வி மேம்பாட்டில் கருத்தூன்றிச் சிவானந்தர்
வல்ல பலபணிகள் வகைவகையாய்ச் செய் நின்றார்
வளங்கள் உச்சமுறப் பயன்பாடு பெறுவதற்காய்க்
களங்கம் இல்லாது கைம்மாறு கருதாமல்
மாணவர் ஊக்குவிப்பும் ஆசிரியர் வாண்மையதும்
பேணவே வேண்டுமெனப் பிசகாமல் பாடுபட்டார்
பண்ணும் கலை நுகர்வும் பைந்தமிழும் இங்கு எங்கள்
மண்ணில் மலர்ந்திடவே மனமொன்றி -
உழைத்திட்டார்
இன்னல் வந்துற்ற போதெல்லாம் இளநகையால்
கன்னல் மொழி பேசிக் கலகலப்பாய் வாழ்ந்து -
வந்தார்
அண்ண இன்றில்லை அவர் வாழ்ந்த வழிகாட்டித்
திண்மை பெற்றின்று செயலூக்கம் பெற்றிடுவோம்

நா. க. சண்முகநாதபிள்ளை
செயலாளர்.
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை.

## தொண்டிலே பெரியோன்!

கல்வி கலை பண்பாட்டின் விழுமியங்கள்
கலந்தொன்றாய்
நல்லதோர் உருவாகி நம்முன்னே வந்ததென்ன
அல்லும் பகலும் எந்நேரமானாலும் மாணாக்கர்
சேவையிலே கண்ணும் கருத்துமாய் நின்றீரே
தோற்றத்தில் சிறியோனாய் தொண்டினிலே
பெரியோனாய்
ஆற்றலிலே வல்லோனாய் அவையில்
சிறந்தோனாய்
ஏற்றபணி வெற்றிபெற இடையறா உழைப்புக்கு
ஊற்றாகி எங்கள் உள்ளங்கள் வாழ்ந்திடுவீர்

— தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தினர்

## அனைவர் மனதிலும் உயர்ந்து நிற்பவர்

அமரர் இராமுப்பிள்ளை—சிவானந்தன் அவர்கள் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர் எமது பேரவையின் தேர்வுக் குழுவில் காப்புக்கிளைப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றுத் தேர்வுகளின் நம்பகத் தன்மையை உறுதி செய்வதில் முன்னுதாரணமாக இருந்தார்.

பேரவையோடு இணைந்து கல்விக்கழகம் தமிழ் வளர்ச்சிக் கழகம், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் நுண்கலை மன்றம், முன்பள்ளி செயற்றிட்டம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு கருத்தொருமித்துக் கடமை செய்தார்.

கல்வித்துறையிலும், நிருவாகத்துறையிலும், கலைபண்பாட்டுத்துறையிலும் தமக்கிருந்த ஆழ்ந்த அனுபவத்தை எங்கள் மண்ணின் மறுமலர்ச்சிக்காகச் செயலூக்கம் பெறச் செய்யும் வகையில் அல்லும் பகலும் அயராது கல்வித் தொண்டாற்றினார்.

கல்வி மேம்பாட்டுப் பேரவையின் சகல பிரிவுகளிலும் இவருடைய தன்னலமற்ற செயற்பாடுகள் முன்னுரிமை பெற்றிருந்தமை எம்மால் என்றும் மறக்க முடியாதவையாகும்.

''உவப்பத் தலை கூடி உள்ளப்பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'' — குறள்

எல்லோரும் விரும்பும்படி எல்லாக் காலத்தும் நல்ல வழியில் ஒழுகியும் பிறர்க்கு உறுதி கூறியும் வாழ்ந்து இனி இவரை நாம் எங்ஙனம் கூடுதும் என எண்ணுமாறு நீங்கிப் போதலே கற்றறிந்தோரது தொழில் என்பது வள்ளுவர் வாய்மொழி.

அவ்வாறே அமரர் சிவானந்தன் அவர்களும் ''உள்ளத்தால் பொய்யாது ஒழுகி'' கல்வி உலகிலுள்ள அனைவரின் உள்ளத்துள்ளும் உயர்ந்துநிற்பவராகிவிட்டார் அவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

அருட்திரு. பிரான்சிஸ் யோசெப்
தலைவர்,
தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை.

## தன்னலமற்ற செயல் வீரன்

உடல்நிலை தளர்வுற்ற போதிலும் உள்ள உறுதியோடும் கடமையுணர்வோடும் திறம்படப்பணியாற்றிய செயல்வீரரான பிரதிக் கல்விப் பணிப்பாளர். இராமுப்பிள்ளை சிவானந்தன் அவர்கள் கல்வித்திணைக்களத்தில் தனது பணிநிலைக்கான அலுவலார்ந்த கடமைப்பட்டியலிலுள்ள பணிகளைச்செவ்வனே நிறைவுறச் செய்துகொண்டு, ஏனையோர் வியக்கின்ற வகையிலே தன் பணிநிலைக்குப் புறம்பான பல்வேறு மக்கட் பணிகளை ஆற்றி வந்த ஆற்றலாளர்.

இனப்பற்றும், நாட்டுப்பற்றும் மிக்க அவர் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், நுண்கலை மன்றம், வட இலங்கைச் சங்கீதசபை, ஆகிய அமைப்புகளின் பணிநிலை வழி வந்த செயற்பாடுகளைச் சிறப்புறச் செய்தார் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தேர்வுப்பகுதியின் காப்புக்கிளைப் பணியாளராக இருந்து தமிழீழப் பொதுத் தேர்வுகளைத் திறம்பட நடாத்த உதவிய தன்னலமற்ற மக்கட் பணியாளராகிய சிவானந்தன் அவர்கள்பேரவையின் தமிழ் மொழிக்கலைத் திறன் செயற் பாட்டுப் பிரிவின் தலைவராகவும் இருந்து மொழி கலை இலக்கியச் செயற்பாடுகள் மாணாக்கரிடயே பெருக அயராது உழைத்தார்.

தமிழீழக் கல்விக் கழகத்தினால் முன்வைக்கப்பட்ட பல்வேறு கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் செயல் வடிவம் கொடுத்த அப்பெருந்தகை தமிழ் வளர்ச்சிக் கழகத்தோடு இணைந்து தமிழ்க் கலைச் சொல்லாக்கச் செயற்பாடுகளிலும், மொழித் தூய்மை பேணுவதிலும் அக்கறையோடு உழைத்தார்.

சிறார்க்கான முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளில் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டு அடுத்துவரும் தலைமுறையின் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமிடும் பணியில் அயராது உழைத்தவர். கல்வி நிலையில் நலிந்துள்ள வன்னிப் பெருநிலப்பரப்பின் ஆசிரிய வாண்மையை வளர்ப்பதற்கான பல்வேறு கருத்தரங்குகளையும் துறை சார்ந்த ஆசிரியர் பயிற்சிப் பாசறைகளையும் நடத்தியவர்.

செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை, சிறுவர் பராமரிப்புப் பூங்கா போன்ற கல்வி நிறுவனங்கள் நாடிச் செல்லும் நேரங்களிலெல்லாம் தேடிச்சென்று உதவிய அந்த இனிய பண்பாளரின் மறைவு கல்வியுலகுக்கு மட்டுமன்றி, தமிழீழத்துக்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் விரும்பிய பணிகளை, விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வது தான் நாம் அன்னாருக்குச் செய்யும் சிறந்த நன்றிக்கடனாகும்.

வெ .இளங்குமரன்
பொறுப்பாளர்
தமிழீழக் கல்விக் கழகம்,
தமிழ் வளர்ச்சிக் கழகம்.

## எடுத்த பணியை செய்து முடிக்கும் திறனுள்ளவர்

அமரர் இ. சிவானந்தன் அவர்களுடன் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக எனக்குப் பழக்கம் உண்டு. நகைச்சுவைப் பேச்சு, ஒளிவு மறைவு இன்றிக் கருத்துக் கூறும் பாங்கு, எடுத்துக்கொண்ட பணியை நிறைவு செய்யும் செயற்றிறன் ஆகியன திரு. சிவானந்தனிடம் அன்று தொட்டே காணப்பட்ட பண்புகள். பிற்காலத்தில் அவர் பாலர் கல்வியிலும், கல்வி மேம்பாட்டுப் பிரிவுகளிலும் ஈடுபட்டார் இந்த ஈடுபாடு அன்றே அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவிலே நானும் மனோன்மணியும் விரிவுரையாளர்களாக இருந்தபோது அமரர் சிவானந்தனும் எங்களுடன் பணியாற்றினார் அப்பொழுதெல்லாம் அறிவியல் அறிவு எளிமையான முறையிலே சிறிய மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் போய்ச் சேரவேண்டுமென எண்ணினார்.

இந்த எண்ணத்தின் விளைவாக அவருடைய கண்டறியாதது என்னும் அறிவியற் கவிதை நூல் வெளிவந்தது. இந்நூலில வெளிவந்த பல கவிதைகள் அன்று தமிழில் அறிவியற் கல்வி மேம்பாட்டுக்கான நிறுவகத்தின் வெளியீடான அறிவொளி இதழிலே வெளிவந்தன.

இவருடைய இவ்வறிவியற் கவிதைகளுக்காக அறிவொளி இதழ்களை நான் சேர்த்து வைத்தேன். இன்றும் அவை என் கையகத்துள்ளன. கண்டறியாதது நூலுக்கு முன்னுரை எழுதிய க. கைலாசபதி: ''முற்கவிஞர்கள் பாடாத சுடுநீப் போதல், மிசின், டைனமோ பெற்றோமக்ஸ், கிறாமப்போன் முதலிய சாதனங்களைக் கவிப்பொருளாக ஒருவர் கொண்டாடுவது அசாதாரணமான கவிநோக்கைக் காட்டுகிறது என்பதில் ஐயமில்லை'' என்று கூறினார்.

நாடகம்

சிவானந்தன் எழுதிய இன்னொரு நூல் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம் என்னும் ஆய்வு ஏடாகும். பல்கலைக் கழகத்தினர் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புகளை இந்நூலிலே அவர் தெளிவாக மதிப்பீடு செய்கிறார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்ற தமிழீழத் தேர்வுகள் யாவற்றுக்கும் காப்புப் பணிப்பாளராக அவர் பணியாற்றினார். காப்புக்குச் சிவானந்தன் என்று சொல்லுமளவுக்கு அவர் பணியாற்றினார். தேர்வுகள் எங்கள் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகவே நடத்தப்படுகின்றன என்ற உண்மையை நன்றாக உள்வாங்கித் தன்னலமற்ற, தூய பணியினைச் செய்தார். அவருடைய செயற்பாடுகள் மறக்கமுடியாதவை.

அச்செயற்பாடுகளை எண்ணும்பொழுதெல்லாம் அவருடைய இழப்பு எமக்குப் பேரிழப்பாகின்றது. அது பெருந்துன்பத்தை எமக்கு ஏற்படுத்துகின்றது. அன்னாரைப் போன்று பணிகளைத் தன்னலமற்ற நிலையிலே நாங்கள் செய்வதன் மூலம் அவருக்கு எம்முடைய வணக்கங்களைச் செலுத்தலாம்.

பேராசிரியர்
அ. சண்முகதாஸ்

### மண்ணை நேசித்த பண்பாளர்

இனவாத அரசின் திட்டமிட்ட தடைகளுக்கும் மத்தியில் எமது தலைமையை நேசித்து தமிழ் மக்களினதும், கல்வியிலும், கல்விக் கொள்கையிலும் உறுதியாகவும், உறுதுணையாகவும் செயற்பட்டு தனது வாழ்வில் கல்வியின் ஊடாக பல சாதனைகளை அமரர் திரு இ சிவானந்தன் அவர்கள் உருவாக்கியுள்ளமை பாராட்டுக்குரியது.

மொழிப்பற்றும், நற்பணியும், நல்லறிவும் கொண்ட அவர் தமிழ் மொழியின் ஊடாக அறிவியல், விஞ்ஞான, இலக்கியங்களை மாணவர் கற்றுப் பயன் பெறவும், அதனூடாக எதிர்காலத்தில் மாணவர் சுபீட்சமடைய வேண்டுமெனவும் பாடுபட்டார். அத்துடன் கல்வியின் ஊடாக சமூக அந்தஸ்தை எதிர்பார்த்து கல்விகற்ற சொந்த மண்ணைத் துறந்து தூரதேசம் படையெடுக்கும் கல்வியாளர்கள் வாழும் எமது நாட்டில், தன் கிராமத்துடனும், தனது மக்களுடனும் வாழ்ந்துவிட்ட இந்த கல்விமானின் தேசப்பற்றும் திட்டமிடல் நடைமுறையும் எம்மக்களால் என்றும் மறக்க முடியாதவை.

மேலும் இந்த மண்ணில் அவலங்களுக்கும், அனர்த்தங்களுக்கும் மத்தியில் அயராத உணர்வுடன் தமிழுக்கும தேசத்துக்கும். தேசிய விடிவுக்கும் வாழ்விலக்கணமாகவும், வழிகாட்டியாகவும் செயற்பட்டவர். எமது வாழ்வோடும், சமூக மேம்பாட்டுடனும் இணைந்து நிற்கும் கல்வியையும், அதன் எதிர்காலத்தையும், எமது மக்கள் தொடர, அவர்கள் தம் கல்வியை வளர்க்க அயராது உழைத்து சேவை மனப்பாங்குடனும், தேசப்பற்றுடனும் இறுதி வரை செயற்பட்டு அமரத்துவம் அடைந்த இப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் போற்றப்பட வேண்டியவர்.

திட்டமிட்ட கல்விமுறையின் ஊடாக மாணவர்களை நல்வழிப்படுத்தி நற்பண்புடைய நல்ல மாணவர்களை நாட்டுக்கும், மக்களுக்கும் ஏற்புடையவர்களாகவும் அர்ப்பணிப்புக்களைச் செய்பவர்களாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்த்த பெரியார் அவர். எமது தேசியப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை ஏற்றுக் கொண்ட ஒரு கல்விமானாக, சமூக சேவையாளனாக, தேசப்பற்றாளனாக வாழ்ந்து மறைந்து போன அமரரின் வாழ்க்கை இந்த மண்ணில் வாழும் எம்மக்கள் மனதில் பதியப்பட்டிருக்கும்.

மண்ணையும், மக்களையும், தலைமையையும், தன் பணியையும். மேலாக நேசித்து, முழுமனதுடனும் தியாக சிந்தனையுடனும் தமது வாழ்வை அர்ப்பணித்து இறுதி மூச்சு வரை உழைத்து உதிர்ந்து போன இவரின் வாழ்வுக் காலங்கள் எங்கள் வரலாற்றுப் பக்கங்களில் என்றும் பதியப்பெறும்.

சு. ப. தமிழ்ச்செல்வன்
பொறுப்பாளர்,
அரசியல்துறை,
த. வி. புலிகள்,
தமிழீழம்.

### சுவைக்க சிவானந்தன் கவிதை ஒன்று

மாவைப் புளிக்க வைத்து
மனசு வைச்சு விடியெழும்பி
பாலைப் பிழிந்தெடுத்துப்
பக்குவமாய்ச் சுவை சேர்த்து
ஆசைக்கு இனியவளே
அடுப்பெரித்துச் சுட்ட திந்தப்
பால் சிந்தி வாய் வழியும்
பாலப்பம் வலு எழுப்பம்.
சொண்டால் வழிகின்ற
சுவையான பால் நக்கித்
தின்டால் இரண்டப்பம்
இட்டாது திவ்வியமே.
பால் சிந்தி வாய் வழியும்
பாலப்பம் வலு எழுப்பம்.
(நித்தம் முழுநேரம்
நீரிறைத்துக் களைக்கிறவன்
சுவையான பாலப்பம்
சுவைத்தபடி பாடுகிறான்)
பால் சிந்தி வாய் வழியும்
பாலப்பம் வலு எழுப்பம்

### காலமெலாம் நிலைத்திருப்பாய்

நீ பேசும் போது
கம்பன் தன் கல்லறையில்
எழுந்து உட்கார்ந்தான்
நீ எழுதும் போது
தமிழ்த்தாய்
மேசை விளக்காய் இருந்து
வாசித்துக் கொண்டிருந்தாள்
நீ நடக்கும் போது
தென்றல் உன்னிடம்
பாடம் கேட்டது
நீ தமிழீழமெலாம்
உலாப்போன
வெண் புறா
நீ காலமெலாம்
நிலைத்திருக்கும்
கவியரசு
நீ மறையவில்லை
எங்கள் மனங்களில்
என்றும் வாழ்வாய்.

— யாழ்ப்பாணக்
கல்விக் கோட்டத்தினர்



### அமரர் இரா

வாழ்வு வளம்

1941 - 06 - 29
1946 — 1949

1950 — 1957
1958 — 1960
1961 — 1965
1965 — 1966

1967 — 1968

01 - 06 - 68 — 21 - 04 - 69

22 - 04 - 69 — 05 - 03 - 74
14 - 11 - 69
27 - 09 - 72
06 - 03 - 74 — 27 - 03 - 78

1976 — 1977
1978 — 1979
1982 —

27 - 01 - 1977
20 - 06 - 1979
28 - 03 - 78 — 27 - 03 - 83
1983 - 05 - 10
1985 - 01 - 01

1989 - 04 - 10

1989 - 05 - 10
1990 - 12 - 01

1995 - 03 - 06

கருத்தரங்குகளில் ச

1. விஞ்ஞானத்தை ஜனரஞ்சகப்
2. இளைஞர்களுக்கான நாடகம்
3. நமது தமிழ் நாடகங்களின்
4. அபேமச்சூர் நாடகங்கள்

5. எதிர்கால நாடகத்தில் இளை

ஆற்றிய பணிகள்:

இலங்கை கலாசார பேரவை
செயலாளர்-மக்கள் கலைப்பே
பொருளாளர்-முற்போக்கு எ
இசைச் செயலாளர்-நடிகர்
செயற் குழு உறுப்பினர்-தமிழ்
பொருளாளர்-கூத்தாடிகள்
செயலாளர்-யாழ் கல்வித்திணை
செயலாளர் வட இலங்கை நு
காப்பாளர்-யாழ் பாலர் கல்வி

நூலாக்கப்பணிகள் மொழி

இடைநிலைப் பொறியியல் தெ
பிரயோக மின்னியல்
மின் கம்பிசுற்றாடல்
பயில்முறை அட்சர கணிதம்
அட்சர கணிதம் ஜே. எச் ஆ
பதித்தமையும், பிரதி பதித்த
பிரயோக அளவையியல் ஜேம்
தலையீட்டியற் பிரயோகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்தன் நினைவுக் களஞ்சியம்

## அறிவிலும் உருவிலும் அகத்தியன்

அமரர் இராமுப்பிள்ளை சிவானந்தன் அவர்கள் எவரும் எதிர்பாராத வண்ணம் இள வயதில் இறைவனடி சேர்ந்த துயரச் செய்தி என்னையும் திணைக்கள அலுவலர்களையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆறாத் துயரினில் மூழ்கினோம்.

ஆரம்பக் கல்வி வளர்ச்சி அவரது உயிர் நாடி. கள்ளமில்லா வெள்ளையுள்ளத்துச் சிறாரின் பள்ளிக் கல்விக்கான ஆக்கங்களைச் செயற்படுத்துவதில் திரத்துடன் உழைத்தவர் இவர்.

சகஅலுவலர்கள், கீழமைந்த அலுவலர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணாக்கர், பெற்றோர் அனைவருக்கும் உதாரண புருஷராய் ஒருமித்த அன்பையும் பாராட்டையும் பெற்றுத் திகழ்ந்த இவரின் செயற்பாடுகள் மேலதிகாரிகளால் பல தடவை மெச்சப்பட்டுள்ளதை நாமறிவோம்.

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றைத் தம் கொள்கைகளாக வரித்த அமரர் எல்லோருடனும் அன்பாகப் பழகும் பண்பாளர்; இரக்க சிந்தனையுடையவர்; எவர்க்கும் வலிந்து உதவும் சுபாவத்தினர்; இறைபக்தி மிக்கவர். நோய்வாய்ப்பட்ட போதும் உடற்றுன்பத்தைப் பாராது "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று கடமையாற்றியவர்.

அறிவிலும், உருவிலும் அகத்தியரையொத்த இக்குறுமுனி சகலகலாவல்லவர். நல்ல கல்வியாளர்; சிறந்த இலக்கியவாதி; கவிஞர்; எழுத்தாளர்; நாடகாசிரியர்; நடிகர்; நெறியாளர்; நிர்வாகி. இசையிலும் நடனத்திலும் பேரார்வமுடையவர்.

நுண்மாணுழை புலமிக்க, கற்றுத்துறையேகிய சான்றோன் சிவானந்தன் அவர்களின் திடீர் மறைவு தமிழ்க் கல்வியுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் செயற்றிறன் என்றும் எம் நெஞ்சைவிட்டு நீங்கா திருக்கும்.

அவரின் திடீர் மறைவால் ஆவிசோர்ந்து, துயருறும் மனைவி, மக்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆன்மா கல்வயல் வேதவன விநாயகரின் திருவடி சேர்ந்து நற்கதியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**செல்வி தி. பெரியதம்பி**
கல்விப்பணிப்பாளர், வடக்கு-கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம்

## சமூக மறுமலர்ச்சி வேண்டியவர்

தென்மராட்சி பெற்றெடுத்த இத் தவப் புதல்வனை சமூக மறுமலர்ச்சி வேண்டிநிற்கும் ஒரு மாமனிதனாகவே காண்கின்றேன். கல்வயல் கிராமச் சூழலில் வாழ்ந்த சிவானந்தன் கற்று உயர்ந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டுடன் வாழ விரும்பினார்; அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார். எவரையும் புன்சிரிப்புடன் ஏற்றுபுரிந்துணர்வுடன் தன்வயப் படுத்தும் ஆத்மீக சக்தி இவருக்குண்டு.

தமது சிந்தனைகளுக்கும் கருத்துகளுக்கும் ஏற்ப வாழ்ந்து காட்டிய ஒரு பெருமகனை இன்று காண முடியவில்லை. "அடியார்க்கும் அடியேன்" என்று மாணிக்கவாசகப் பெருமான் பாடியது போல், "ஐயா கும்பிடுறேனுங்க" என்ற புன்சிரிப்புடன் அமரர் சிவானந்தனின் வரவேற்புக் குரல் எங்கள் நெஞ்சங்களில் ஒலிக்கின்றது. ஒரு நல்ல மனிதனை நாம் இழந்து நிற்கின்றோம் நல்ல குடும்பத் தலைவனை அன்னாரின் குடும்பத்தினர் இழந்து தவிக்கின்றனர்.

ஏட்டளவில் இருந்த "கல்வி அபிவிருத்தியை" நாட்டுக்கு உகந்ததாக ஆக்கித் தந்தவர் சிவானந்தன் ஐயா அவர்கள். ஆரம்பக் கல்விச் செயற்பாடுகள், ஆசிரியர் வாண்மை விருத்தி, பாடசாலை மேற்பார்வை, வினா வங்கி பொம்மலாட்டம், மொழித்திறன் போட்டிகள் மாணவர் மதிப்பீடுகள் என்பன அவரின் மனத்திற்குகந்த சில கல்விச் செயற்பாடுகளாகும். இத்துறைகளில் அவர் ஏற்படுத்திய தாக்கத்தினை எம்மால் இன்று உணரமுடிகிறது. அவர் விட்டுச் சென்ற கல்வி அபிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது கல்வித்துறை சார்ந்த சகலரினதும் பொறுப்பாகும்.

**திரு. இ. சிவானந்தன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
கல்வித் திணைக்களம்
யாழ். வலயம் 11

## சிவாவின் அர்ப்பணம் துறப்பணமாகுக!

கடந்த சில வாரங்களாக கல்வி அலுவலர்கள் கூடிக் கதைக்கும் போதும், முக்கிய விடயங்கள் தொடர்பாக முடிவு எடுக்கும் போதும் அமரர் இராமுப்பிள்ளை சிவானந்தன் அவர்களை நினைவு கூருகிறோம். குறிப்பாக தமிழ்த் தினப் போட்டி விதிமுறைகள் பற்றியும், தேர்வுகள் பற்றியும் கலந்துரையாடும்போது அவர்கள் இல்லாததை நினைத்து கவலைப்படுகிறோம். அவரது இடம் நிரப்பமுடியாத வெற்றிடமாகவே இருக்கிறது. ஓர் அரிய பெரிய கல்விமானை இழந்து விட்டோம்.

அவர் குடும்பத்திலும் சரி, அவர் இறப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகி விட்டது. என்றும் அவருடன் பிரியாது அன்பாக வாழ்ந்த அவரின் மனைவி, மக்கள், சகோதரர், உறவினர் அனைவருமே பாதியில் முடிந்த வாழ்வு இதுவே என்று கலங்குகின்றனர். எம் அனைவரையும் கவலையில் ஆழ்த்தும் அரைகுறை நாடகமே இந்நிகழ்வு.

சிவானந்தன் மறைவின் போது என்மனதில் உறுத்தும் நிகழ்வு இது. 1994ஆம் ஆண்டு தமிழ் தினப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை நாடகப் போட்டியாளர் தமக்கொரு நல்ல மேடையோடு இடம் வேண்டும் என்று சிவானந்தன் அவர்களைக் கேட்டனர். "சரி ஏற்பாடு செய்து தருகிறேன்" என்று கூறிவிட்டு சில உதவி ஆட்களுடன் இந்து மகளிர் கல்லூரியில் ஒதுக்குப் புறமாக இருந்த ஓர் அறையை ஒழுங்கு செய்ய முற்பட்டார்.

அவ்வறையில் இருந்த பழைய பனம் சலாகைகளை வெளியே எடுத்து வைத்தார். அவ்வேளை சலாகையில் உள்ள ஆணி ஒன்று அவர் கால் விரலில் ஏறியது. ஆணியை இழுத்தெடுத்து விட்டு, தொடர்ந்தும் அறையைத் துப்புரவாக்கி நாடகப் போட்டிகளை அவ்வறையில் நடத்தினார். அன்று ஏறிய ஆணிப்புண்ணே அவர் வாழ்வு அரைகுறையாக முடியக் காரணமானது.

### அர்ப்பணித்தவர்

இது மட்டுமல்ல, கண் பார்வை மங்கி இருந்த காலத்திலும் கடமை உணர்வோடு வேலை செய்தவர். கால் வீக்கம், கை சோர்வு ஏற்பட்ட போதும் கூட தனக்கென கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்தே முடித்தார். இதனாலே தான் அமரர் சிவானந்தன் தனது வாழ்க்கையை பொது மக்களுக்காக அர்ப்பணித்தவர், செயல் வீரன் என்று மதிக்கிறேன். அவர் இறப்பையிட்டு மன வேதனை அடைகிறேன்.

அமரர் இ. சிவானந்தன் கவிஞராக பல புதுமையான அறிவியற் காவியங்களையும் கவிதைகளையும் ஆக்கியுள்ளார். நடிகனாக நாடகங்களில் நடித்துள்ளார். கல்வி நெறியாளனாக பல அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தியுள்ளார்.

இவையாவற்றிலும் அவரின் சமூக நோக்கு —

"அடிமைகளாய் மக்களினை மிருகமாக்கி அவர்தம் முழு வாழ்வைப் பலியிட்டுத் தப பழம் காலம் போய்யொழிய வேண்டும்"

"சற்றும் உதவாத சாதி அடக்கு முறையும் பம்மாத்துக் காட்டுகிற பாசாங்குப் பேர் வழிகளும் அழிய வேண்டும்"

"மக்களின் அறிவுப் பாதை மலர்ந்திட சகலவினப் பிரசைகளுக்கும் சமவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்" — என்பனவேயாகும்.

இவற்றை அடைய அவர் தனது வாழ்நாள் முற்றிலும் "பேராளி" யாகவே இருந்தார். அவர் அர்ப்பணம் எங்கள் வாழ்விற்கு துறப்பணமாக வேண்டும். அவர் செயல்கள் நமது கருவறையில் சேர வேண்டும்.

**க. கந்தசாமி**
கல்விப் பணிப்பாளர்-வலயம்II

## சிவானந்தன் ஒரு நெல்லிக்கனி

உண்ணும் போது ஒரு சுவை. உண்டபின் நீர் அருந்தினால் மற்றும் ஒரு சுவை. உண்டு செரித்தபின் உடலுக்கு உயிராற்றல் வழங்குவதால் அரு மருந்து. இவை நெல்லிக்கனியின் சிறப்புக்கள். சிவானந்தன் ஒரு நெல்லிக்கனி.

பழகும் பொழுதும் சுவைத்தார். நினைவாகிய நீருடன் கலந்து இன்றும் சுவைக்கின்றார். இத்தகைய ஒருவருடன் நெருங்கிப் பழகிய கிழமை, அருமருந்தாய் வாழ்வு முழுவதும் உயிராற்றல் வழங்கும் என்ற நம்பிக்கையும் உண்டு.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் எழுபதாண்டுகளுக்கு மேலாகிவிட்ட முதுமையால், தள்ளாடிய காலத்தில் அதற்கு ஊன்றுகோலாகவும் தூண்டுகோலாகவும் விளங்கியவர் சிவானந்தன்.

இவர் செயலாளரான நாளிலிருந்து முதுமையில் ஓர் இளமையை ஏற்றிச் சங்கத்தைச் சுறுசுறுப்புடன் இயங்க வைத்தமை, ஓர் அரும்பெரும் செயல் என்பதற்கு ஐயம் இல்லை.

சங்கம் தேர்வுகள் பல நடத்தியது.; விழாக்கள் எடுத்தது. பலரது கருத்தையும் கவர்ந்து இளமை எழிலில் ஒளிர்ந்தது இனி......?

சிவானந்தனின் உயிராற்றல் மேலும் தொடர்ந்து எமக்கு வழிகாட்டினால்...?

வழிகாட்டும் என்ற உறுதியான நம்பிக்கை எமக்குண்டு 'நம்பினார் கெடுவதில்லை'. நம்புகிறோம்... சிவானந்தனே! வழிகாட்டு:

**க. சொக்கலிங்கம் [சொக்கன்]**
(துணைச் செயலாளர், ஆ. தி. பா. சங்கம்)

## செயற்றிறன் மிக்க கடமைவீரன்

வலய மட்டத்தில் கல்வி அபிவிருத்தி பற்றி ஆலோசித்த வேளைகளிலெல்லாம். கல்விப் பிரச்சனைகளை யதார்த்தமாக ஆராய்ந்து உண்மையைக் கூறும் பண்பினனாகவிருந்தவர். அமரர் திரு. சிவானந்தன் அவர்கள்; தனது பதவியைக் காப்பாற்ற வேண்டும் என்றோ பதவியுயர்வு பெறுவதற்காக உண்மையை மறைத்து யாவருக்கும் நல்ல பிள்ளையாகவிருந்து பதவியைக் காப்பாற்றும் எண்ணம் அவருக்கு இருக்கவில்லை. தாம் ஏற்ற கடமையை நேர்மையாகவும் சரியாகவும் செய்து சமூக முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டுமெனும் வேணவா மிக்கவராக இருந்தவர். கல்விப் பிரச்சினைகளை ஆராய்ந்து கல்வி அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தபோதும் அத்திட்டங்களை அமுல்படுத்த முனைந்த போதும் எவ்வித தயக்கமுமின்றி எழுந்த எதிர்ப்புக்களையெல்லாம் சவாலாக ஏற்று நடைமுறைப்படுத்தியவர். தனது செயலில் நேர்மை, விடாமுயற்சி ஆர்வம், அபிவிருத்தி நோக்கு யாவும் கொண்டு தனது காரியாலயக் கடமையை எட்டு மணி நேரத்துக்குப் புறம்பாகவும் செய்து பல உத்தியோகத்தருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்.

**ச. சுப்பிரமணியம்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
திட்டமிடல்,
வலயம் 1.

## பலதுறைப பணியாற்றிய பண்பாளர்

அமரர் இராமுப்பிள்ளை சிவானந்தன் அவர்கள் யாழ்ப்பாண மண்ணின் புகழ்பெற்ற கல்வியாளராகத் திகழ்ந்தவர். 1958 – 1960 காலப்பகுதியிலே உயர்தர விஞ்ஞானக்கல்வியை சற்று ஆளுமையைப் புலப்படுத்தியதனால் யாழ். இந்துவின் மைந்தர்களில் ஒருவராகப் புகழ்பதித்துக்கொண்டவர்.

விஞ்ஞானப்பட்டதாரியாக, நாடக டிப்ளோமா பயிற்சியாளராக, மரபுவழித் தமிழறிஞராக, முற்போக்கு எழுத்தாளராக, நாடக சிந்தனையாளராக, இசைக்கலைஞராக, கல்வித்துறை அதிகாரியாக, பிரதிக்கல்விப்பணிப்பாளராகப் பல்துறைப்பரிமாணங்களைத் தாங்கிப் பணியாற்றிய பண்பாளர். அனைத்துக்கும் மேலாக அவரது மானுடநேயம், பரந்த நோக்குப் பாராட்டத்தக்கது.

ஆரம்பக் கல்வித்துறையில் அவரது அளவு கடந்த முன் முயற்சிகள் யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டின. யாழ்ப்பாணம் ஆரிய — திராவிட பாஷாவிருத்திச் சங்கத் தலைவராயிருந்து ஆற்றிய பணிகள் அளப்பில.

பாடசாலை மேற்பார்வைகளின்போது அவரது நுண்மதியாலறல்களையும், எவரையும் புண்படுத்தாத வகையில் அன்புணர்வினூடாக ஆலோசனை கூறும் பாங்கையும் கண்டு நான் வியந்திருக்கிறேன். செக்கச் சிவந்த தோற்றமும், எவரையும் ஆகர்ஷிக்கும் இயல்பும் அமரரின் பேறுகள். அன்னாரது நினைவலைகள் என்றும் நெஞ்சில் நிலையானவை. அவரது இழப்பு யாழ்ப்பாணத் தமிழ் மண்ணுக்கு ஈடில்லாத பேரிழப்பு. அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள். எல்லாம் வல்ல இறைவன் அவரது தூய ஆன்மா சாந்திகொள்ள வழிகாட்டுவானாக.

**அ. பஞ்சலிங்கம்.**
அதிபர், யாழ். இந்துக்கல்லூரி

## கல்விக் கோட்டங்களின் இரங்கற் செய்திகள்

அமரர் இரா. சிவானந்தன் மாபெரும் கல்விச் சிந்தனையாளர். ஆரம்பக்கல்வியில் எம் சிறார்கள் வளர்ச்சி காண அரும்பாடுபட்டவர். செயல்முறைக் கல்விகுச் சிறப்பாக உழைத்தவர். முத்தமிழ் வளர்ச்சிக்கு முனைந்து பாடுபட்டவர். மாணவரை மதிப்பிடுவதற்குப் புதிய உத்திகளை வகுத்தவர். ஆசிரியர் கீதத்தை அறிமுகப்படுத்தியதோடு, அவர்களின் வாண்மை விருத்திக்கும் அயராதுழைத்தவர். கல்வி நிருவாக சேவையில் காலடி எடுத்து வைப்பவர்களுக்கு முகாமைத்துவ நுட்பங்களை முனைப்போடு வழங்கியவர்.

அன்னவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய சங்கானைக் கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் சார்பில் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.


— சங்கானைக் கல்விக் கோட்டத்தினர்.

அமரரவர்கள் தமக்கு வசதியான இடத்தைத் தேடாது, கடமையுள்ள இடத்தில் தம்மை இணைத்து வாழ்ந்த மிக நல்ல மனிதர். புன்னகை ததும்பும் இனிய முகத்துடன் ஆழப் பொருள் பொதிந்த, அர்த்தமுள்ள கருத்துக்களை அழகு தமிழில் அள்ளித்தந்த வள்ளல். இவர், தம்மை ஒரு பெரிய மனிதரென்றோ, அதிகாரியென்றோ, வெளிக்காட்டிச் செயற்பட்டவரல்லர். இவருடன் பழகிய நாட்கள், இவரோடு நாம் கொண்டிருந்த பிணைப்புக்கள் யாவும் உயிரில் கலந்த உறவாக நிழலாடுகின்றன.

அவரின் குடும்பத்தினர், உறவினர், கல்விப் பணியிலுள்ளோர், மாணவர்கள், கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் ஆகியோருடன் எமது பிரிவு வேதனையை உரிமையுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

— கோப்பாய்க் கல்விக் கோட்டத்தினர்.

(மிகுதி 7 ஆம் பக்கத்தில்)



ப்பிள்ளை சிவானந்தன்

பிறப்பு
கல்வி – யா/ சைவப்பிரகாச வித்தியாசாலை, சாவகச்சேரி
கல்வி – யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி
கல்வி – யா/ இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.
பட்டப்படிப்பு – இலங்கை பல்கலைக்கழகம், கொழும்பு.
செய்து காட்டுநர், பௌதிகத்துறை, பல்கலைக்கழகம் கொழும்பு.
உதவி விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை
மொழிபெயர்ப்பாளர், தரம் 2 கல்வி வெளியீட்டு திணைக்களம்
பதிட்பாசிரியர், இலங்கை கல்வி சேவை 5 வகுப்பு
திருமணம் செல்வி ச. முத்தாச்சி
மகன் செவ்வேள் பிறப்பு
ஆசிரிய அனுபவம் பெற்றுக் கொள்ள உதவி ஆசிரியர் கொழும்பு இசிப்பத்தான வித்தியாலயம்.
பட் மேற்படிப்பு – நாடகமும் அரங்கியலும்.
பட்ட மேற்படிப்பு கல்வி டிப்ளோமா.
கல்வி முதுமாணி எழுத்துபரீட்சை சித்தி – ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கவில்லை
மகன் சேயான் பிறப்பு.
மகள் சக்தி பிறப்பு
வட்டாரக் கல்வி அதிகாரி – செட்டிகுளம், வவுனியா.
வட்டாரக்கல்வி அதிகாரி – யாழ்ப்பாணம்.
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 2 திருபதவி உயர்வு
கண்ணில் சிகிச்சை – அரவிந்த மருத்துவ நிலையம், மதுரை, இந்தியா
கோட்டக்கல்வி அதிகாரி பண்டத்தரிப்புக்கோட்டம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண கல்வி மாவட்டம்.
இறப்பு

ர்ப்பித்த கட்டுரைகள்:

த்தல் 6. அரங்க, ஒளியூட்டல்
7. ஆசிரிய நாடக அரங்கம்
மொழி நடை 8. ஆரம்ப கல்வியில் நாடகம்
9. ஆசிரியர்களிடையே கலை கலாசார விழிப்புணர்வு
ர் பங்கு 10. பாலர் கல்வியில்விளையாட்டு-கொள்கை

ன் தமிழ் நாடக குழுவில் பணிபுரிந்தமை 1972–1977
அரங்கம்
த்தாளர் சங்கம்
றியம்
கலை அரங்கம்

க்கள பரீட்சை சபை
கலை மன்றம்
க்கழகம்

பெயர்ப்பு:
தொகுதி 1, தொகுதி 2, உறம்றி
ச். பொற்றன்
இபெற்சன்
தொகுதி 1, 2 பிறிக்ஸ், பிறயின்
ச்போல்ட்
மையும்
சன்

பிரயோக நீரியல்
கணனி 1 பீ. பி லீவிஸ்
சாலகங்கள் பீ. ஜி. மத்தியூஸ்

### செய்த ஆக்க வேலைகள்:

பாடவிதான அபிவிருத்தி நிலையம் தரம் 10, 11 நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் கைநூல் எழுத்தாக்கம் -1979
வாரிக்குட்டியூர் சிறு பாடசாலை ஆசிரியர். அதிபர் முகாமைத்துதம் 1980
செட்டி குளம்-நாடகப் பட்டறை கலாசார விழா - 1980
ஆண்டு 1-5 அழகியல் பாடத்திட்டம் ஆசிரியர் கைநூல் – 1985
ஸ்ரீ பாதக் கல்விக் கல்லூரி அழகியல் பாடத்திட்டம் எழுதியமை – 1987
ஆரம்பக் கல்வியூட்டும் பொம்மலாட்டம் நூலாக்கச் செயலமர்வு – 1988
அழகியல் ஆண்டு 1-5 இசைப்பாடல் நூல் அச்சிட்டு வெளியிட்டமை – 1988
பாலர் பாடசாலை ஆக்க விளையாட்டு செயலமர்வுகள் நடாத்தியமை - 1989
பட்டப்பின் கற்பித்தல் டிப்ளோமா அழகியல் மொடியூல் எழுத்தாக்க
அச்சேறிய நூல்கள்:
"கண்டறியாதது" அறிவியல் ஆரம்
இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் நாடக அரங்கம் 1937 - 1957
காலம் சிவக்கிறது – நாடகத் தொகுப்பு

— தொகுப்பு செ. செல்வராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கஸ்தூரியார் வீதி, இலங்கையன் பதிப்பகம் லேனில் அரைப் பரப்பு காணி இணற்று வசதியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி T. இராஜநாயகம், காளி கோயில்லேன் பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. [36028]

### கோழிக்குஞ்சு விற்பனை

செற்றா பாம் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், கோல்டன் கொமற் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக் குண்டு. சிந்து பல்பொருள் விற்பனை நிலையம், திருநெல்வேலிச் சந்தி. [36039]

நல்லின லோமன் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக் குண்டு. குஞ்சு ஒன்றின் விலை ரூபா 15/-. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி, உடுவில். [36044]

நல்லின புறொயிலர் இறைச்சிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி, உடுவில். [36043]

Prima Hyline White பேட்டுக் குஞ்சுகள் Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு நல்லூர் வீடியோ சென்றர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [36025]

### VENUS ANTENNA

To View Ruppavahini, Madras Programmes. Fixing Venus Antenna. Repairing Antennas. Radios, T. V. Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works, 284. Stanley Road (Ariyakulam Junction) Jaffna, Branch: Kandy Road, Chavachcheri. (C-951)

### வாழ்த்து மடல்கள்

புத்தாண்டு வாழ்த்து மடல்கள், இரகுநாதையர் பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும். 94ஆம் ஆண்டு உயர்கல்வி வெளியீடு, விலங்கியல் A/L 'பாஸ் பேப்பர்' வர்த்தகம் நிதியலும் வெளிவந்து விட்டது. மக்மிலன், ஸ்ரீகாந் யாழ். நல்லூர். [சி-644]

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளுக்கும் வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். S. ஜெயராஜா 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [8468]

### வகுப்புகள்

கேக் ஐசிங், மாச்சினி அலங்காரம், Fondant Icing. ஒப்பனைக்கலையும், தலையலங்காரம், பூ அலங்காரங்கள், மலர்ச்செண்டுகள் தயாரித்தல் [Silk Ribbon, Stocking Net, Bouquets] புதிய வகுப்புக்கள் 16-4-95 முதல் ஆரம்பமாகிறது. தொடர்பு: Yogi Home Science Academy நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி), நல்லூர். (சி-634)

### இரத்தம் தேவை

சத்திர சிகிச்சை பெறவிருக்கும் நோயாளி ஒருவருக்கு இரத்தம் தேவை. இரத்ததானம் செய்வோர் தொடர்பு கொள்க: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [36040]

### இலகு திருமண சேவை

31 வயது, விசாகம், செவ்வாய் 7, கனடாவில் உள்ள படித்த மணமகளுக்கு ஏற்ற மணமகன் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் தேவை. தொடர்பு! ஞாயிறு காலை. து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (36038)

### திருமண சேவை

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். குற்றமற்ற 38 வயது என்ஜினியருக்கும், 37 வயது ஆசிரியருக்கும், 36 வயது டாக்டருக்கும் மணமக்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [36041]

---

மீசாலை அல்லாரை
அறுகம்புலம்

## மகாகணபதிப்பிள்ளையார் தேவஸ்தான புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

பங்குனிமாதம் 22ஆம்நாள் இன்று 05-04-95 புதன்கிழமை காலை 7.00மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் வந்தருள் பெறுக.

ஆலய பரிபாலன சபையும்,
இந்து இளைஞர் மன்றமும்.

அல்லாரை,
மீசாலை. (சி/893)

---

யாழ். வண். கிழக்கு, அத்தியடி

## அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம்

06 – 04 – 1995 தொடக்கம்
17 – 04 – 1995 வரை

### விசேட உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| 06 – 04 – 1995 | வியாழன் | கொடியேற்றம் நண்பகல் 12-00 மணி |
| 09 – 04 – 1995 | ஞாயிறு | பஞ்சமுகார்ச்சனை முற்பகல் 8-00 மணி |
| 10 – 04 – 1995 | திங்கள் | பூந்தண்டிகை பிற்பகல் 5-30 மணி |
| 12 – 04 – 1995 | புதன் | வேட்டைத்திருவிழா பிற்பகல் 4-00 மணி |
| 13 – 04 – 1995 | வியாழன் | சப்பரத் திருவிழா பிற்பகல் 5-30 மணி |
| 14 – 04 – 1995 | வெள்ளி | தேர்த் திருவிழா முற்பகல் 8-15 மணி |
| 15 – 04 – 1995 | சனி | தீர்த்தத் திருவிழா முற்பகல் 8-30 மணி |
| 16 – 04 – 1995 | ஞாயிறு | வசந்தோற்சவம் பிற்பகல் 5-30 மணி |
| 17 – 04 – 1995 | திங்கள் | ஷேத்திர பாலகர் உற்சவம் பிற்பகல் 6-00 மணி |

06 - 04 - 1995 தொடக்கம் 12 - 04 - 1995 வரை தினமும் மாலை 7-30 மணி முதல் 8-30 மணி வரை கம்பவாருதி இ. ஜெயராஜ் அவர்கள் கம்பராமாயணத் தொடர் விரிவுரை ஆற்றுவார்கள்.

– நிர்வாக சபை.

[35996]

---

ஹாட்லியின்

## கண்ணீர் அஞ்சலி

### ஏ. எம். ஸ்பென்ஸர்

[முன்னாள் ஆங்கில ஆசிரியர்]

கற்றவர் மெய்ம்மறந்தார்; கற்றதையே நினைத்திருந்தார்: கற்பித்தவரோ கருத்தினிலே கலந்திட்டார். கற்றதும் கருத்தும் கல்வெட்டாயாகிவிட கற்பித்தவரின்று கண்துஞ்சி விட்டாரோ! ஹாட்லி கலங்குகிறது; கண்ணீர்மலர் சொரிகிறது; ஆங்கில ஆசிரியரின் ஆத்ம சாந்திக்காய் அன்பையே காணிக்கையாக்கிக் கொள்வதுடன் கர்த்தரின் கருணை வேண்டி காலடியில் நிற்கிறது.

அதிபர், ஆசிரியர், ஊழியர்,
மாணவர், பழைய மாணவர், பெற்றார்

ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை (36037)

---

## நினைவில் நீங்கா 31-ம் நாள் நினைவலைகள்

[05 – 04 – 1995]

நிஜமாகி : 04–10–1924

நினைவில் : 06–03–1995

### திருமதி வினாசித்தம்பி இலட்சுமி

பெற்ற தாயாகி பெருமையுடன் எமைத்தாங்கி உற்றதுணை சேர்ந்து உலகில் எமைத் தோற்றுவித்து நற்பண்புகள் தனை பயிலுவித்து நலமுடன் நம் வளர்ச்சி பேணி, உற்ற தந்தை இழந்தகாலை உயரிய சுமைதாங்கியாகி நாம் பெற்ற சிறப்பிற்கெல்லாம் நீரே முதன்மையாகி நின்றீர்! எதையும் தாங்கும் இதயம் இன்று உம்பிரிவைத் தாங்காது தவிக்கிறதே. உம்பிரிவால் விளைந்த துயர் நீர் வெந்த தீயினால் தான் இனி தீரும்.

உமது ஆத்மா சாந்தியடைய இந்நாளில் அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் வாடும்;
பிள்ளைகள், மருமக்கள்
பேரக்குழந்தைகள், உறவினர்கள்.

உமைநேசன் வீதி.
வேளாபள்ளம், மிருசுவில். [36022]

---

உ
ஓம் விராட்விஸ்வப்பிரம்மணே நம

அராலி கிழக்கு

## கரைப்பிட்டி விஸ்வேஸ்வரி ஸ்ரீ காளிகாதேவி ஆலய

பஞ்சகுண்ட பக்ஷ

## மஹா கும்பாபிஷேக விழா

இன்று
**05 - 04 - 95 புதன்கிழமை**
காலை 08-35 முதல் 10-15 வரை
''அனைவரும் வருக அன்னையருள் பெறுக''

—மேற்படி தேவஸ்தானம்.

(36047)

---

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

வல்வெட்டித்துறை

### இல்ல மெய்வன்மைப் போட்டி-95

06 – 04 – 1995 (வியாழக்கிழமை)
பி. ப 2-00 மணி

பிரதம விருந்தினர்:
திரு. க. கந்தசாமி அவர்கள்
(யாழ் கல்விப்பணிப்பாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள், பா. அ சபை,
பழைய மாணவர்சங்கம்.

(சி-964)

---

## சேவையாளர்கள் தேவை

எம்மால் நடத்தப்படும் வலுவிழந்தோர் வாழ்வு நிலையத்தில் பணிபுரிவதற்கென சேவை நோக்கமும், முற்போக்கு சிந்தனையுமுள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறோம்.

விண்ணப்பதாரி குறைந்த பட்சம் க. பொ. த (சா. த ) பரீட்சையில் 04 திறமைச் சித்திகள் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அவசியமாகும். க. பொ. த. (உ. த.) தகைமை உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை: 22 — 30

தகுதியினையுடைய விண்ணப்பதாரிகள் எமது பிரிவுச் செயலகங்களினூடாக 15-04-95இற்கு முன்பாக விண்ணப்பிக்கலாம்.

அல்லது

நிர்வாக இணைப்பாளர்,
தமிழர்
புனர்வாழ்வுக் கழகம்,
83/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்

என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(36042)

---

## புதுவருட மலிவு விற்பனை

| | |
|---|---|
| சில்க் பொலியெஷ்ரர் பிளேன் கலர் 44'' மீற்றர் | 50/- |
| விஸ்கோஸ் பிளேன் கலர் 44'' மீற்றர் | 100/- |
| விஸ்கோஸ் பிரிண்டட் 44'' மீற்றர் | 100/-, 115/-, 150/- |
| கைரேறற் பொலியெஷ்ரர் பிரிண்ட் 36'' மீற்றர் | 38/- |
| பேபிமல் 36'' மீற்றர் ,, | 45/- |
| ஜே. பி. சாறி | 490/- |
| அண்ணாமலை சாறி | 240/- |
| போய்ஸ் ஷேர்ட் S/S S. M L. | 100/- |
| போய்ஸ் ஷேர்ட் S/S XL | 120/- |
| போய்ஸ் ஷோர்ட்ஸ் | 50/- |
| போய்ஸ் ஜீன்ஸ் | 75/- |
| டெனிம் கவுஸ் | 175/- |
| பத்திக் சாரம் | 110/- |
| பிளவுஸ் | 125/-, 175/- |
| ஸ்கேர்ட் | 200/-, 220/- |
| ஷேர்ட் S/S | 290/- |
| ஷேர்ட் L/S | 325/- |

**14 - 04 - 1995 வரை மட்டுமே**

த. குமாரசாமி
'ரெக்ஸ்ரைல்ஸ்
[illegible] நல்லூர்.
[36046]

---

## கடமை செய்யத் தவறும் அதிகாரிகள் பதவிநீக்கம்

### ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 5

அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் தமது கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறும் அரச அதிகாரிகள் பதவியில் இருந்து நீக்கப்படுவர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்கண்டவாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த கூட்டம் ஒன்றில் வைத்தே அவர் இந்த உத்தரவை விடுத்தார்.

''அரசாங்கம் மக்களின் நன்மைக்காக அறிமுகம் செய்யும் திட்டங்களை 24 மணி நேரத்தில் நிறைவேற்ற அரச அதிகாரிகள் தயாராக இருக்க வேண்டும்.

திட்டங்களை நிறைவேற்றத்தவறும் அரச அதிகாரிகள் உடன் பதவி நீக்கம் செய்யப்படுவர் என்றும் ஜனாதிபதி கூறினார். [ஐ-3]

## தாயும் தனயனும்....

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

1985ஆம் ஆண்டு மஹோற்சவத்தின்போது சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. தொடர்ச்சியாக கடந்த 10 வருடங்களில் ஆலயத்தில் பல திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அது மட்டுமல்லாமல் காளிஅம்பாளுக்கு சித்திரத்தேர் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது தேர் வேலைகள் அனைத்தும் நிறைவுபெறும் நிலையிலுள்ளன. 1995ஆம் ஆண்டு ஆவணிமாதம் நடைபெறவிருக்கும் மஹோற்சவத்தின்போது காளி அம்பாள் சித்திரத்தேர் வெள்ளோட்டத்தை நடத்துவதென பரிபாலனசபை தீர்மானித்துள்ளது.

ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்று 15 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையால் பொதுமக்களின் விருப்பத்திற்கமைவாக ஆலயம் 22 – 01 – 1995 இல் பாலஸ்தானம் செய்யப்பட்டு 2½ மாத காலப்பகுதியில் பல இலட்சம் ரூபா செலவில் ஆலயம் புனரமைக்கப்பட்டு இன்று புனராவர்த்தன உத்தமயாக நவகுண்ட பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இதனையிட்டு பரிபாலன சபையினராகிய நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். ஆலயத் திருப்பணியையும், காளி அம்பாள் சித்திரத்தேர் திருப்பணியையும், நல்லபடி நிறைவேற்றுவதற்கு எமது மக்களும் வெளிநாடுகளில் வாழும் எமது பகுதி மக்களும் தாராளமான பண உதவி செய்துள்ளார்கள். அவர்களின் தருணமறிந்த உதவியே இவ்வாலய வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்று கூறுகையில் பெருமையடைகின்றோம். இவர்கள் அனைவருக்கும் மகா கணபதியும், காளித்தாயும் சகல வல்லமைகளையும் அளிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

இந்த ஆலயத்தில் நித்திய பூசைகள், திருவிழாக்கள் ஏனைய உற்சவங்கள் சிறப்புற நடைபெறுவதற்கும் ஆலயத்தை நல்லபடி பரிபாலனம் செய்வதற்கும், உபயகாரர்களும் ஏனைய அடியார்களும் தங்களது பரிபூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்கள். எங்கள் பணியை தொடர்ந்து செய்வதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம். ★

---

## நிரு பட்டப்படிப்பு பிரிவு

கோண்டாவில்.

**G. A. Q. 1995** (யாழ்ப்பாணம்)

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. உதயன் |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் | — திரு. சோதி |
| புவியியல் | — திரு. வேலா |

விரிவுரைகள் நடைபெறுவதால் அனுமதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

**G. A. Q. 1996** (யாழ். பேராதனை)

புதிய பிரிவு ஆரம்பம்:
05 – 04 – 1995
(சி-818)

---

## விண்ணக வாழ்வில் 31ஆம் நாள்

மண்ணில் : 12 – 04 – 1934



விண்ணில் : 10 – 03 – 1995

### செல்வி கந்தையா பரமேஸ்வரி

(இளைப்பாறிய ஆசிரியை – பண்டத்தரிப்பு மகளிர் மகா வித்தியாலயம்)

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய், எங்கள் எல்லோரினதும் நெஞ்சங்களிலும் வாழ்ந்து, எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாகவும், விளங்கிய நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும், உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது.

இவரது ஆத்ம சாந்திக்காக இன்று (05-04-95) புதன்கிழமை மாலை 5-00 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கத் திருப்பலியிலும், (09-04-1995) ஞாயிற்றுக்கிழமையன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் இவரது மரணச்சடங்கில் நேரில் வந்து கலந்து செபித்து, ஆறுதல் கூறிய அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், மரியாயின் சேனையர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சகோதரன், சகோதரிகள், மைத்துனர்.

374, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (36049)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
392/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கோட்பாடும் வெளிப்பாடும்

வடக்கு - கிழக்கில், மிகக் குறிப்பாக வடக்கில், அரசாங்க ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறை நீண்ட காலப் பிரச்சினையாகும்.

வடக்கில் நிலவும் டாக்டர்கள் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக ஐ. நா. தொண்டர்களைத் தருவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது. இப்போது பாகிஸ்தானிலிருந்து சத்திரசிகிச்சை நிபுணர்களைத் தருவிப்பது குறித்துச் சுகாதார அமைச்சர் பௌசி பிரஸ்தாபித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் டாக்டர்களாகக் கற்றுத்தேறும் தமிழ் மாணவர்களில் மிகப் பெரும் எண்ணிக்கையானோர், வடபகுதியில் பணிபுரிய விரும்பாமல் வெளிமாவட்டங்களுக்கு செல்வதே டாக்டர்கள் பற்றாக்குறைக்குக் காரணம் என்று முந்திய அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக இருந்த ரேணுகா ஹேரத் கூறிவந்தார்.

அதே காரணத்தையே இப்போதைய சுகாதார அமைச்சரும் கூறுகிறார். அவர்கள் சொல்வதில் தவறில்லை. வடபகுதியில் ஒரு பல்கலைக்கழகம் இருந்தும், அதில் கற்றும், யாழ். போதனா வைத்தியசாலையில் பயிற்சி பெற்றும் டாக்டர்களாகப் பலர் பட்டம்பெற்ற போதிலும், வடக்கில் டாக்டர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவது பெரும் வெட்க்கேடான ஒரு நிலையாகும்!

ஒருவர் தனது தொழிலைத் தெரிவதற்கும், அதனைச் செய்வதற்கும் உள்ள உரிமை மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று என்பது உண்மைதான். ஆனால், தான் பிறந்து வளர்ந்த, கல்வி பயின்ற, தனது சொந்த மண்ணுக்கு—அங்கு வாழும் மக்களுக்கு — தனது சேவை பயன்பட வேண்டும் என்ற தேச பக்தி, சொந்த மக்கள் நலன் பேணும் பற்று இல்லாமல் போவது மிகவும் கவலைக்குரியது

அதுவும் போர்க் கால சூழ்நிலையில், முன்னர் இல்லாத வாறு மக்கள் இலகுவில் நோயாளர்களாக மாறும் இவ்வேளையில், தமது சொந்த மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று நினைக்காதவர்கள், தங்களுக்குள்ள மனித உரிமை குறித்து பேசுவது மனித நேய மற்ற ஒன்றாகும். மனித நேயமே வைத்தியத் தொழிலின் அடிப்படைக் கோட்பாடு. அதனைத் துறந்து அத்தொழிலை செய்வதென்பது சுயநலத்தின் வெளிப்பாடு.

நாட்டு மக்களின் விடுதலைக்காகத் தமது உயிர்களையும் ஈயுமளவுக்குத் தியாகம் பொலியும் இந்தப் பூமியில், மனித நேயமே இல்லாதவர்கள் பிறந்ததும் ஒரு சாபக்கேடு தான்! முகம் பார்க்கும் கண்ணாடியில் பூசிய கரிக்கிறல் போன்று, இவர்களால் முழுத் தமிழர் சமுதாயத்துக்குமே அவமானம். பெரும் கரும்புள்ளி!

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் கற்றுத்தேறும் தமிழ் மாணவர்கள், அந்தந்தப் பகுதியில் பணிபுரிய முன்வரவேண்டும் என்று அமைச்சர் பௌசி கேட்டுள்ளார்.

குறிப்பிட்ட பகுதிப் பல்கலைக்கழகத்தில் கற்றுத்தேறும் டாக்டர்கள், அந்தந்தப் பகுதியில் குறிப்பிட்ட ஆண்டுகளாவது பணிபுரிவதனைக் கட்டாயமாக்கும் விதத்தில் ஒரு விதியை இயற்றுவதன் மூலமே சுயநலம் மிகுந்தோரை வழிக்குக் கொண்டுவரமுடியும்; வெறும் கோரிக்கை மூலம் அல்ல.

பல்கலைக்கழகத்தில் சேரும் போதே, இத்தகைய விதிமுறைக்கு இணங்கக் கூடியதாக ஒப்பந்தம் ஒன்றில் மாணவர்கள் கைச்சாத்திடவகை செய்யவேண்டும். அப்போது தான் இனிமேலாவது இத்தகைய பற்றாக்குறையால் உருவாகக் கூடிய நெருக்கடிகளைத் தவிர்க்கலாம்.

தமிழர் பகுதி என்பதால் இது விடயத்தைப் பாரதூரமானதாகக் கருதாமல், ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி காலத்தைக் கடத்தி விட்டால் போதும் என்று அரசும், அமைச்சரும் எண்ணக் கூடாது.

இலங்கையில் இரண்டாவது

# பொது சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி நிலையத்தை இங்கு நிறுவ முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 5

பொதுசுகாதாரப் பரிசோதகர் பயிற்சி நிலையம் ஒன்றை தெல்லிப்பளை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பிரிவில் அமைக்க சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌசி அனுமதி வழங்கியுள்ளார்.

முன்னர் இவர்களுக்கான பயிற்சி நெறி களுத்துறையிலேயே வழங்கப்பட்டுவந்தது. அங்கு தனிச் சிங்களத்தில் இவர்கள் பயிற்சி பெறவேண்டி இருந்தது

அதனால் பலர் தமது பயிற்சியை இடை நடுவில் கைவிடும் நிலையும் இருந்துவந்தது

கடந்த மாதம் 21 ஆம் திகதி சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌசி ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் இது தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ் பகுதிகளில் நிலவும் சுகாதார சேவைக் குறைபாடுகள் பற்றி அக் கூட்டத்தில் அமைச்சருக்கு விளக்கப்பட்டது.

புதிதாகப் பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகளை அந்தந்த மாவட்டங்களிலேயே நடத்த பரீட்சை ஆணையாளர் ஊடாக நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

யாழ். மாவட்டம் உட்பட வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குடும்ப நல சேவையாளர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அந்தந்த மாவட்டங்களில் இருந்தே வருடாந்தம் பயிலுநர்களைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுப்பது எனவும் அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. [ஐ-4]

## ஏறாவூரில் கடைகள் நள்ளிரவில் தீக்கிரை

கொழும்பு ஏப் 5

ஏறாவூர் பகுதியில் உள்ள சில கடைகள் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு மர்மமான முறையில் தீக்கிரையாகின.

இனந்தெரியாத கோஷ்டி ஒன்றே இக்கடைகளுக்கு தீவைத்ததாகக் கூறப்படுகிறது.

ஏறாவூரில் உள்ள காட்டுப் பள்ளிவீதி, சதாம்ஹுசெய்ன் வீதி, பெண்சந்தைவீதி, ஆகிய இடங்களில் இருந்த கடைகளே தீப்பிடித்தன.

மேற்படி பகுதிகளில் உள்ள சில கடைகளில் சட்டவிரோதமாக நீண்டகாலமாக கஞ்சா மதுபானம் போன்றவை விற்கப்பட்டு வந்ததாகவும் கடைகள் எரிப்புக்கும் இதற்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

பாடசாலை மாணவர்களும் இளைஞர்களும் கஞ்சா போன்ற போதைப் பொருள்களுக்கு அடிமையாகி வருவது குறித்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## ஹவாய் தீவில் சிவாலயம்; இன்று அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம் ஏப். 5

அமெரிக்காவின் ஐம்பதாவது மாநிலமான ஹவாய் தீவில் அமைக்கப்படவுள்ள சிவநடராஜர் ஆலயத்துக்கான அடிக்கல்நடும் வைபவம் இன்று அமெரிக்க நேரப்படி அதிகாலை 5-30 மணிக்கு நடைபெறும்.

சிவயோக சுவாமிகளின் சீடரும் அமெரிக்க சைவ சித்தாந்த திருச்சபையின் தலைவரும் அளவெட்டி ஆச்சிரம குருவுமாகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு, 1972 பெப்ரவரி மாதம் கிடைத்த தெய்வகட்டளைப்படி, ஹவாய் தீவிலுள்ள புனித வைலுவ நதிக்கரையில் சுயம்புஇலிங்கம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

இதனை அடுத்து ஆலயம் ஒன்று அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து 1987 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆறு கோணங்களுடைய ஒரு ஸ்படிக லிங்கம் கிடைக்கப்பெற்றது.

இது உலகின் மிகப் பெரிய ஸ்படிக லிங்கம் ஆகும்.

இந்த ஆலயத்துக்கான சிற்பவேலைகள் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு, சிற்பங்கள் கப்பல்மூலம் அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அமெரிக்காவில் நடைபெறும் மேற்படி நிகழ்வை ஒட்டி இன்று மாலை 6 மணிக்கு அளவெட்டி பசுபதீசுவரர் ஆலயத்தில் விசேட அபிஷேகம் இடம்பெறவுள்ளது. (இ-14)

## கிளிநொச்சிப் பகுதியில் புராதன சின்னங்கள்

கிளிநொச்சி, ஏப் 5

கிளிநொச்சி கல்மடுவில் பாரம்பரிய கலை வடிவங்களுடன் கூடிய புராதன சின்னங்களும், கட்டடச் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

'பிராமிய எழுத்துக்கள்' எனச் சந்தேகிக்கப்படும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கருங்கல் தூண்கள் ஒன்பது முக்கோண வடிவ நீர்த் தடாகம், வழிபாட்டுத் தலம் என்பனவும், எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட செங்கட்டிகளுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றை கிளிநொச்சி அரச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. தி. இராசநாயகம் தலைமையிலான அவ்வூர் பிரமுகர்கள் மற்றும் மக்கள் அடங்கிய குழுவினர் கண்டுபிடித்தனர்.

இவை கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசத்தை மேலும் ஆய்வு செய்வதற்காக, யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் திரு. புஸ்பரத்தினத்தின் உதவி நாடப்பட உள்ளது. (இ-5-76)

## திருமறை கலாமன்ற பாஸ்கா நாடகம்

குருநகர் ஏப். 5

திருமறைக்கலாமன்றம் 'பாஸ்கா' தினத்தை முன்னிட்டு வழமைபோல் மேடையேற்றும் பிரமாண்டமான தயாரிப்பான ''அன்பில் மலர்ந்த அமரகாவியம்'' (பக்தி- இசை உரை நாடகம்) நாளை 6 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற இருக்கிறது.

யாழ் - பிரதான வீதி மன்ற அரங்கில் விசேடமாக அமைக்கப்பட்ட 150 அடிகளுக்கும் மேற்பட்ட அகல மேடையில் 300க்கும் மேற்பட்ட கலைஞர்களால் மேற்படி நாடகம்நடித்துக்காண்பிக்கப்பட இருப்பதாக மன்ற இயக்குநர் பேராசிரியர் வண. நீ மரியசேவியர் அடிகள் தெரிவித்தார்.

தினமும்இரவு 7-15மணிக்கு ஆரம்பமாகும் நாடகம் தொடர்ந்து 7ஆம், 8ஆம், 9 ஆம் திகதிகளிலும் மேடையேறும்.

அதே வேளை திருமறைக்கலாமன்றம் இவ்வருடம் 'பாஸ்கா' தினத்தையொட்டி மன்னார், முல்லைத் தீவு, கொழும்பு, திருமலை மாவட்டங்களிலும் நாடகங்களை மேடையேற்றிஇருப்பது குறிப்பிடத்தக்கது [இ-51)

ஜே. ஓ. சி. குண்டு வெடிப்பு:

# குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஏற்க நீதிபதி மறுப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

கூட்டுப்படைகள் தலைமையகம் [ஜே. ஓ. சி.] குண்டு வெடிப்பு வழக்கில் 2ஆவது எதிரியான இளம் பெண்ணின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஒரு சாட்சியாக ஏற்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி வெஸ்லி அபேசேகரா மறுத்து விட்டார்.

எதிரி தனது குற்றஒப்புதல் வாக்கு மூலத்தை சுயவிருப்பத்தின் பேரில் அளிக்கவில்லை என்றும் நீதிபதி தெரிவித்தார்.

எதிரிமீதான குற்றச்சாட்டை நிரூபிக்க வேறு சாட்சியம் இல்லாவிடில் எதிரியை விடுதலை செய்ய உத்தரவுவிடுமாறு எதிரிசார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் கோரினர்.

இதுபற்றி முடிவு எடுக்க மேமாதம் 4ஆம் திகதி வழக்கு எடுக்கப்படும் என்று நீதிபதி தெரிவித்தார். [இ]

வடக்கு - கிழக்கில்

# தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட்டாலே மலையகமக்கள் சுயஉரிமைபெறலாம்

### கூட்டணித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 5

வடக்கு — கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகமாக அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே மலையக மக்களும் சுய உரிமையோடு வாழ முடியும்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இ. தொ. கா. ஏற்பாடு செய்திருந்த தற்போதைய ஜனாதிபதி முறையும் இலங்கையின் அரசமைப்பும் என்ற தலைப்பில்ஒருகருத்தரங்குகொழும்பு ஹோட்டல் ரேணுகாவில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில்கலந்துகொண்டு உரை நிகழ்த்திய திரு சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

தொகுதி வாரியான நாடாளுமன்றத் தேர்தல் முறை வடக்கு — கிழக்கு மாகாண மக்களை பாதிக்காவிட்டாலும் இந்திய வம்சாவழி மலையக மக்களை பெரிதும் பாதிக்கும்.

இதனை உணர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி மலையக மக்களின் உரிமைகளை பாதுகாக்கும்வகையில் செயற்பட தயாராகியுள்ளது.

தெளிவில்லாத — விளக்கம் இல்லாத — சமஷ்டி முறை ஏட்டுச் சுரைக்காய்க்கு ஒப்பானது.

மாகாணசபை அதிகாரங்களில் நாடாளுமன்றம் தலையிடு செய்வது நிர்வாகத்தைக் குறைக்கும் ஒரு செயலாகவே அமையும்.

மேலும் மாகாணசபையை கலைக்கும்அதிகாரமும்ஜனாதிபதிக்கு வழங்கப்படக் கூடாது என்றார்.

இந்த வகையில் தமிழ் அரசியல் கட்சிகள் நிதானத்துடனும் பொறுப்புடனும் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-14)

## புலிகளின் குரல் வானொலியில்

**05 - 04 - 1995**
**புதன் இரவு**

- ★ 8-02 — குயிலோசை— நிகழ்ச்சியில் மெற்றாஸ் மயில் எழுதிய 'ஆனையை அடக்கிய அரியாத்தை'' நாட்டுக் கூத்து
- ★ 8-20 — வாத்திய கானங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — சந்திரா தனபாலசிங்கம் எழுதிய ''சதிசிலாவதி''

**06 - 04 - 1995**
**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**
**புதன் மாலை**

- ★ 5-01—சிந்தனைச்சிதறல்
- ★ 5 02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02— உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 —உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# மோட்டார் ஊர்தி உரிமை மாற்றம்

மோட்டார் ஊர்திகளை உரிமை மாற்றம் செய்யும்போது புதிய உரிமையாளர் பெறவேண்டிய ஒப்புதல் கடிதத்தின் மாதிரி கீழே தரப்படுகின்றது.

மோட்டார் ஊர்தி உரிமை மாற்றம் செய்யும் போது இது போன்ற கடிதத்தையே மோட்டார் ஊர்திப் பதிவாளரிடம் எழுதி ஒப்படைக்கவேண்டும் என மோட்டார் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத் தருகின்றனர்.

மோட்டார் ஊர்தி உரிமை மாற்றம் சம்பந்தமான செய்தி சென்ற 24-3-1995 உதயன் பத்திரிகையிலும், 23-3-1995 ஈழநாதம் பத்திரிகையிலும் வெளியானது குறிப்பிடத்தக்கது.

**உரிமை மாற்றம் செய்வதற்கான ஒப்புதல் கடிதம்**

பதிவாளர்,
மோட்டார் ஊர்திப் பதிவுப்பகுதி,
தமிழீழம்.

[விற்கும் உரிமையாளர் முகவரி] இல் வசிக்கும் [விற்கும் உரிமையாளர் பெயர்] ஆகிய நான் [விற்கும் திகதி] ஆம் திகதியில் இருந்து [ஊர்தி இலக்கம்] அடையாளம் காட்டும் இலக்கத்தினையுடைய [மோட்டார் ஊர்தி இனம் மோட்டார் ஊர்தியின் உரிமை மாற்றத்தினை ஒப்புக்கொண்டு இதன் கீழ கையொப்பம் இட்டிருக்கும் [வாங்கும் உரிமையாளர் முகவரி] இல் வசிக்கும் [வாங்கும் உரிமையாளர் பெயர்] என்பவருக்கு அறுதியாக விற்றுகையளித்து விட்டேன் என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இவ்வூர்தியின் நடப்பு ஆண்டுக்கான வரி அனுமதிப் பத்திரம் / மோட்டார் ஊர்தி பாவிக்கப்படாமைக்கான பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டை இலக்கம் ..............................

..............................
விற்கும் உரிமையாளர் ஒப்பம்

[ஊர்தி இலக்கம்] அடையாளம் காட்டும் இலக்கத்தினையுடைய இவ்வூர்தி [வாங்கும் திகதி] திகதியில் அறுதியாக எனக்கு விற்கப்பட்டுள்ளது. என்பதனை இத்தால் ஒப்புக்கொண்டு இதன் கீழ் கையொப்பம் இடுகின்றேன்.

குடும்ப அட்டை இலக்கம் ..............................

..............................
வாங்கும் உரிமையாளர் ஒப்பம்

## கல்விக் கோட்டங்களின்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிக்கல்விப் பணிப்பாளராக விளங்கி அமரரான இ. சிவானந்தன் அவர்கள் கல்வி உலகிற்கு ஆற்றிய சேவை அளப்பரியது. மதிப்பிட முடியாதது. 6-3-1995இல் இறைவனடி சேர்ந்த அன்னவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று உடுவில் கல்விக்கோட்டச் சார்பில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— உடுவில் கல்விகோட்டத்தினர்.

நண்பர்களை மதிக்கும் பண்பு அமரர் சிவானந்தனது இயல்பு. எளிமையான வாழ்வு அவரது தத்துவம். எதையும் ஒழுங்குடன் நிறைவு செய்வது அவரது சித்தாந்தம்.

பல வேலைகளை எடுத்துக்கொள்ளுவார், ஆனால் பதற்றப்படாமல் காரியம் ஆற்றுவார். ஆளுமை பல வாய்க்கப்பெற்றவர், அன்பின் உயர்வை மதிப்பவர், மனித நேயத்தை உணர்ந்தவர்.

தொகுத்து நோக்கின் நல்ல மனிதராக வாழ்ந்தார், வாழ்ந்து காட்டினார். அவரின் எண்ணங்கள் நெஞ்சில் அலை மோதுகின்றன.

— வேலணை, ஊர்காவற்றுறைக் கல்விக்கோட்டத்தினர்.

தொட்டிலிலும் வட்டிலிலும் துலங்குகின்ற கட்டிலிலும்
சிட்டுக் குருவிகள்போல் சிந்தனைகள் சிறகடிக்க
ஒட்டித் தமிழோடு உறவாடிக் கவிபாடிக்
கட்டிக் கற்கண்டுக் கவிதையிலே கொண்டு வந்து
கண்டறியாதன பல காட்டிநின்ற கவியரசே
ஓசைக் கவிபடைக்க ஒன்றிவந்த கவிஞரெலாம் நின்
நேசக் குரல் கேட்காது நெஞ்சம் பதைக்கின்றார்
பாசம் மறக்காது பரிதவிக்கும் எங்கள் குரல்
வீசுகின்ற தென்றலாய் விண்ணகத்து வாராதோ!

நேசம் மறக்காது நெக்குருகும் எம்முளத்து நீ
வாசம் செய்கின்ற வரமதனைத் தந்திடுவாய்
காலம் மறக்கா நின் கல்விப் பணிகள் தமைச்
சீலம் மறக்காதெம் சிந்தைதனில் இருத்திடுவோம்.

— நல்லூர்க் கல்விக் கோட்டத்தினர்

விஞ்ஞானம் என்ன மெஞ்ஞானம் என்ன சகல கலைகளிலும் வல்லவனான எமது பிரதிக் கல்விப் பணிப்பாளர், அன்பு, பண்பு, அடக்கம் என்பவற்றிற்கு உறைவிடமான பெருந்தகை. கல்வித் தொண்டுக்கே தன் வாழ்க்கையின் பெரும்பாகத்தைச் செலவிட்ட செம்மல். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வத்துடன் சேர்ந்து விட்டார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

— பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தினர்

மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செய்ய அருமையும் பாரார், அவமதிப்பும் நோக்கார் கருமமே கண்ணாயினார் என்ற வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர் திரு. இ. சிவானந்தம் அவர்கள். தமிழ் மண்ணின் மீது கொண்ட பற்றுதலைத் தமது மண்ணிலுள்ள மாணவர்களுக்குச் செய்த அரியசேவை மூலம் நிலைநாட்டியுள்ளார். நன்றிமறவாத தமிழினம் அவரை என்றும் நினைவு கூரும். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

— மருதங்கேணி கல்விக்கோட்டத்தினர்

ஈழத்துக் கல்வி வானில்
எழுங்கதிர் எனத்திகழ்ந்தீர்
அறிவுத் துறைசார்ந்த அனைவருக்கும்
ஒளிவிளக்காய் ஒளிர்ந்து நின்றீர்
காலனுக்கு உங்கள்
கடைமை வாழ்வு பிடிக்கவில்லை
பாதி வழியில் மீட்டுக்கொண்டான்
பரிதவித்து நிற்கின்றோம்
நூறாண்டு சென்றாலும்
நினைவலைகள் எம்மைவிட்டு
நீங்காவே நீள்கா.

— பளைக் கல்விக் கோட்டத்தினர்

மறைந்தும் மறையா மாமணியே
மக்கள் மனங்கவர் கவிஞனே
கல்விப் புலம் மறவாக் கலங்கரை
விளக்கே
தேன் என இனித்திடும் நின் பேச்சும்
தென்றலென உலாவரும் நின்நடையும்
காலமெலாம் உனை நினைவூட்டும்.
காத்திருப்போம் மீண்டும் வருவாய்-எம்
கவலைகள் தீர்ப்பாய்!
சிவானந்தரே! நீர் மறையவில்லை-எம்
சிந்தைதனில் உறைந்துவிட்டீர் எந்நாளும்

-- சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்தினர்

கண்டறியாதன அறிந்த வித்தகன்
கண்டறிந்திட எம்மையும் வைத்தவன்
காற்றிடன் காற்றாய்க் கலந்து
போயினன்
கல்வியின் உயர்ந்த காவிய நாயகன்
ஏற்றும் அன்புச் சிவானந்தா
அழியா உன்பெயர் என்றும் வாழும்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைப்
பிரார்த்திக்கும்

— கரவெட்டிக் கல்விக் கோட்டத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின் செயலாளர் அம்பாறைக்கு

அம்பாறை, ஏப். 5

கிழக்கு மாகாண விவசாயிகள் நெல் விற்பனை செய்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் ஆராயவென ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. பாலபட்டபெண்டி தலைமையில் உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை அம்பாறைக்கு விஜயம் செய்ய உள்ளது. (ஒ-7)

# திருமலை திரும்பிய ஈழ அகதிகளின் பொதிகள் தடுத்து வைப்பு

## திருப்பித்தரக் கோரி உண்ணாவிரதம்

கொழும்பு, ஏப். 5

தமிழகத்தில் இருந்து அண்மையில் தாயகம் திரும்பிய ஈழத்தமிழ் அகதிகள் பலரின் பொதிகள் உரியவரிடம் ஒப்படைக்கப்படாமல் திருமலை துறைமுகப் பகுதியில் தொடர்ந்து சுங்க அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து அகதிகள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

தமது பொதிகளை மீளப்பெற அரசியல்வாதிகள், தொண்டர் ஸ்தாபனங்கள் மூலம் அகதிகள் நடவடிக்கை எடுத்தும் உரிய பலன் ஏதும் ஏற்படவில்லை.

இதனை அடுத்து பாதிக்கப்பட்ட மேற்படி அகதிகள் நேற்றையதினம் வவுனியாவில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க இருந்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அரசுக்கும் தமது நிலையை உணர்த்தும் நோக்கில் அவர்கள் இந் நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

தமது பரிதாப நிலையை விளக்கி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அகதிகள் மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து தலைமன்னார் திரும்பிய ஈழ அகதிகள் எவரது பொதியும் அங்குள்ள சுங்க அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்படவில்லை அங்குள்ள அதிகாரிகளும், பொலீஸாரும் இது விடயத்தில் கெடுபிடி இன்றி மனிதாபிமான ரீதியில் நடந்துகொண்டனர் என்றும்—

திருமலை துறைமுகத்துக்கு வந்தடைந்த அகதிகள் மீதே இதுபோன்ற கெடுபிடிகளில் பொலீஸாரும், சுங்க அதிகாரிகளும் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் தலைமையை புரிந்து கொள்ளாத அரசு

### ஆய்வாளர் வெளியிடும் கருத்து

கொழும்பு, ஏப். 5

விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைமை பற்றிபுரிந்து கொள்ளாமையும் ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஒன்றாகும்.

ஐலண்ட் பத்திரிகையின் அரசியல் ஆய்வாளர் திரு. ஜெகான் பெரேரா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றும் அணிகளின் நிலைப்பாடுகளும் [illegible] மட்டும் பேச்சுவார்த்தைக்கான ஒரு சமன்பாட்டை உருவாக்கி விட முடியாது.

விடுதலைப் புலிகளின் உயர் தலைமையும் அவர்களின் எண்ணமும் அறியப்பட வேண்டுமெனில், அவர்களுடைய உத்தியோகபூர்வமான பேச்சாளர்களின் கூற்றுக்களையும் அறிக்கைகளையும் கவனிக்க வேண்டுமெனவும் திரு. ஜெகான் பெரேரா மேலும் குறிப்பிட்டுள்ளார்.


மலரும் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட

★ சாறி பிளவுஸ் துணிகள்

★ றெடிமேட் கவுண்கள்

தெரிவுக்கு

**சீதாராம் துணிப்பூங்கா**

இல. 91, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(36054)


## தமிழ் யுவதிகளை மணம் புரிய முயலும் படையினர்!

மட்டக்களப்பு, ஏப். 5

மட்டக்களப்பு இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் வசித்துவரும் இளம் தமிழ்ப் பெண்களை இராணுவத்தினரும், பொலீஸாரும் திருமணம் என்ற போர்வையில் தம்வசப்படுத்தி வருவதாகத் தெரிய வருகிறது.

பொருளாதார ரீதியில் இக்கட்டான நிலையிலுள்ள தமிழ்ப் பெண்களுக்கு போதிய பொருளாதார வசதிகளைச் செய்து தருவதாகவும் அதற்காக தம்மை திருமணம் செய்து கொள்ளும்படியும் படையினர் தமிழ்ப் பெண்களை வற்புறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தமிழ்ப் பெண்களை இராணுவம் தமக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கும் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

### படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள

# தமிழ்க் குழுக்களை நிராயுதபாணிகள் ஆக்குவது குறித்து ஆலோசிக்கப்படும்

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஏப். 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில், படையினரின் கட்டுப்பாட்டிலிருக்கும்பகுதியில் உள்ள தமிழ்க் குழுக்களை நிராயுதபாணிகளாக்குவது குறித்து ஆலோசிக்கப்படும்

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதியில் ஆயுதம் தரித்த தமிழ்க் குழுக்கள், ஏனைய தமிழ்க் குழுக்கள் மீது பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இயக்கங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் — என்று ஜனாதிபதி மேலும் கூறினார்.

தீவுப்பகுதிகளில் ஈ.பி.டி.பி. இயக்கத்தினர் ஆயுதங்களோடு நடமாடுகின்றனர்; இது ஏனைய இயக்கங்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

வவுனியாவிலும் ஈ.பி.ஆர். எல் எவ். இயக்க அலுவலகத்துக்கு ஆயுதங்களுடன் சென்ற புளொட் இயக்கத்தினர், அவர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் கிழக்கு மாகாணத்திலும் இடம்பெற்று வருகின்றன. ஆகையால் பொதுத் தேர்தலுக்கு முன் நீங்கள் வாக்குறுதி அளித்தபடி தமிழ்க் குழுக்களை நிராயுதபாணிகளாக்குவீர்களா என செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### பொருண்மிய மேம்பாட்டு நிறுவன

## அதிபாரம் ஏற்றும் படகு களாலி சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம், ஏப். 5

உற்பத்திப் பொருள்களை பெரு நிலப் பரப்பிலிருந்து குடா நாட்டுக்கும், குடா நாட்டிலிருந்து பெரு நிலப் பரப்புக்கும் களாலிக் கடலூடாக ஏற்றி இறக்க அதிகாரம் சுமக்கக்கூடிய படகொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வடிவமைத்துள்ளது.

இப்படகை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதியின் துணை நிறுவனமாகிய யூனிரெக் பொறியியல் நிறுவனம் தேர்ந்த பொறியியலாளர்களின் ஆலோசனையுடன் வடிவமைத்து உருவாக்கி சேவையில் விட்டுள்ளது.

இதன் மூலம் ஓட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையின் உற்பத்திகளாகிய ஓடு, செங்கட்டி ஆகியவற்றை குடா நாட்டுக்கு கொண்டு வரவும்—

உப்பு உற்பத்தி நிறுவனத்தின் உணவுக்கான உப்பையும் மீன் கருவாடு பதப்படுத்துவதற்கான அரைத்த உப்பையும் பெரு நிலப்பரப்புக்குச் சந்தைப்படுத்தவும் வழி ஏற்படுள்ளது.

ஒரே நேரத்தில் 15 ஆயிரம் கிலோவுக்கு (1½ லொறி லோட்) மேற்பட்ட எடையைச் சுமக்கக் கூடியதாக இப்படகு வடிவமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பு முதலியநாச்சி (கனகம்மா)

நாரந்தனை, சரவணையைச் சேர்ந்த தம்பு முதலியநாச்சி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்புவின் அருமை மனைவியும், புண்ணியமூர்த்தி (ஆசிரியர்), கலியாணசுந்தரம், இராசலெச்சுமி, சுப்புலெச்சுமி, இராசரெத்தினம், காலஞ்சென்ற ஸ்ரீபாலன் மற்றும் கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், பராசக்தி, செல்லம்மா, காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் நித்தியானந்தன், பரநிருபசிங்கம், இராசேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக உடன் [4-4-1995] இல் நிறைவேறியது என்பதை மிகு வேதனையுடன் தெரியத் தருகிறோம். உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
த. புண்ணியமூர்த்தி
(மகன்)

வைரவர் ஒழுங்கை,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

[36061]

### முருகேசு வீரசிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு வீரசிங்கம் காலமானார்.

இவர் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், திருமதி இராசம்மாவின் சகோதரரும் வசந்தமோகன் (ஜேர்மனி), சந்திரன் (ராஜன் இசைக்குழு), பத்மினி, [illegible] (புத்தளம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நந்தா [ஜேர்மனி], ராஜேஸ்வரி, நவரட்னம், மைக்கல் [புத்தளம்] ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஜினி (ஜேர்மனி), நிதன் (ஜேர்மனி), பிந்துஷா, பிறேமினி, சிந்துஷா, கிரிசரன், டினேசன், சாளினி, நிலாவினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (6-4-95) வியாழக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு செம்மணி மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன்: சந்திரன்
[ராஜன் இசைக்குழு]

545, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(36043)

### திருச்செல்வி ஜெயரூபி ஏரம்பமூர்த்தி

பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருச்செல்வி ஜெயரூபி ஏரம்பமூர்த்தி 04 - 04 - 95 செவ்வாய்க்கிழமை காலை காலமாகி விட்டார். இவர் நாகலிங்கம் ஏரம்பமூர்த்தி (இராமையா - மூளாய்) காமாட்சிப்பிள்ளை (A.D ஆயிலடி கடை பன்னாலை செல்விப்பளை) ஆகியோரின் புதல்வியும், ராமேஸ் Computor Singapore) இன் அன்புச் சகோதரியும், அமரர் தாமோதரம்பிள்ளை Ebitor Trans தகவல் இலாகா), கனகமணி (மலேசியா), அமரர் சட்டநாதன் (Field officer தகவல் இலாகா மலேசியா), அமரர் அன்னப்பிள்ளை கந்தையா (கொல்லன் கலட்டி), அமரர் கனகேஸ்வரி மயில்வாகனம், (நடன விரிவுரையாளர் ஆசிரியர் கலாசாலை கோப்பாய்), அமரர் சண்முகம் ஓய்வு பெற்ற ஆசிரியர் மட்டுவில் மகாவித்தியாலயம்), பாக்கியலட்சுமி (சரசாலை), கோபாலசாமி (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), சரஸ்வதி ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை) ஆகியோரின் பெறாமகளும், அமரர் மகேசன் (சோதி), Railways மலேசியா) லோகாம்பிகை (மலேசியா), சிவானந்தன் (Retired accountant Electricity Board மலேசியா), பரமேஸ்வரி (PetalingJay) ஆகியோரின் அன்பு மருமகளுமாவார்.

பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [5-4-95] காலை 9 மணிக்கு கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. ஏரம்பமூர்த்தி
(தகப்பன்)

"புஸ்பா வாசா"
பழம் றோட், கோப்பாய் தெற்கு.

(36050)

## ஆலயங்களில்

கோப்பாய் தெற்கு மாரியம்மன் கோவில் ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன் கிழமை காலை 11மணிககு, அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். (இ-5)

★ ★ ★

மீசாலை அல்லாரை அறுகப்புலம் ஸ்ரீ மகாகணபதி பிள்ளையார் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறும். (இ-5-117)

★ ★ ★

மேலைப்புலோலி, வாணக்குடியிருப்பு, சொக்கன் கலட்டி, முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவமும், வேள்வியும் இன்று 5 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறும். [இ-5-173)

★ ★ ★

அரால் கிழக்கு கரைப்பிட்டி, விஸ்வேஸ்வரி ஸ்ரீ காளிதேவி ஆலய புனராவர்த்தன பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை காலை 8-35மணி முதல் 10-15மணி வரையிலான சுபவேளையில் நடைபெறும். கும்பாபிஷேக கிரியைகளை சிவஸ்ரீ சதா யோகீஸ்வரக் குருக்கள் தலைமை வகித்து நடத்துவார். (இ-13)

★ ★ ★

சரணவாய் வடக்கு எள்ளன் குளம்பதி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11நாள்கள் இடம்பெறும். [இ-5-15]

★ ★ ★

பருத்தித்துறை ஓட்டு வாசல் அருள்மிகு ஸ்ரீசண்டி பரமேஸ்வரி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 8-45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

14 ஆம் திகதி தேர்உற்சவமும் 15 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் 19 ஆம் திகதி தெற்ப உற்சவமும் நடைபெறும். [இ-5-15]

## முத்திப்பேறு

ஸ்ரீராம கிருஷ்ணமடத்தின் மூதத தலைவர்களில் ஒருவரும், அன்னை சாரதா தேவியின் நேரடி சீடர்களில் ஒருவருமான சுவாமி ஆதிநாதானந்தர் நேற்று முன்தினம் கல்கத்தாவில் முத்திப்பேறு எய்தினார். [illegible]

### இடம்பெயர்ந்த மக்களுக்கு

## புதுவருடத்துக்கு முன்னர் நிவாரணப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப். 5

இடம் பெயர்ந்தவர்களுக்கான மாசி மாத கடைசி இரண்டு வாரங்களுக்கும், பங்குனி மாத முதல் இரு வாரங்களுக்குமான 24,9,25ஏ முத்திரைகளுக்குரிய உலர் உணவுப் பொருள்களை புதுவருடத்திற்கு முன்னதாக விநியோகித்து முடிக்குமாறு ப.நோ.கூ. சங்கங்களை யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

இந்த இரண்டு முத்திரைகளுக்கும் அரிசி, மா, சீனி மைசூர் பருப்பு, லக்ஸ்பிறேயுடன் 4 அங்கத்தவர்கள் குடும்பத்துக்கு ஹைலண்ட் பால்மா மற்றும் சவர்க்காரமும் 3 அங்கத்தவர்கள் குடும்பத்துக்கு சன்லைற் மற்றும் 3 அங்கத்தவர்களுக்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு தேயிலையும் வழங்கப்படவுள்ளன. (ஒ-4)

## கைலாச பிள்ளையார் மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப் 5

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலின் வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (இ-4)

## கொழும்பில் கிளின்டனின் பாரியார்

அமெரிக்க முதல்பெண்மணி ஹிலறி கிளின்டன் தனது ஆசிய சுற்றுப்பயணத்தின் ஒரு கட்டமாக நேற்று பிற்பகல் கொழும்பு வந்தடைந்தார்.

இங்கு வருவதற்கு முன்பு அவர் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தார்.

அவர் தனது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு இன்று மாலை சவூதி அரேபியாவிற்குப் பயணமாகிறார். ஒ-5]

## சிவானந்தன் நினைவுக் கூட்டம்

முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராமுப்பிள்ளை சிவானந்தனின் நினைவுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் அதன் தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் யோசெப் அடிகளாரின் தலைமையில் நினைவுக் கூட்டம் நடைபெறும்.

இக் கூட்டத்தில் கல்வித்துறை சார்ந்த பலர் நினைவுரையாற்றுவார்கள்.

அமரர் சிவானந்தனின் "கண்டறியாதது" என்ற நூலும் அங்கு வெளியிடப்படும். [ஒ-3]

### பிரிட்டிஷ்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணனிகள், குளிரூட்டிகள், ஒளிப்படக்கருவி, றோணியோ மற்றும் மருத்துவ உபகரணங்களும் நேற்றைய வைபவத்தின்போது கையளிக்கப்பட்டன (ஒ-4)

### புலிகளுட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தகவல் வெளியிட்டுள்ளது

விடுதலைப் புலிகளின் உயர் மட்டத்துடன் அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்களை நடத்துவதில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூடிய கவனம் செலுத்துவார் என்று "த ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது (அ-3-10)

### ஜப்பான்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில —

காலி அலுவலகத்தில் இருந்த 14 அதிகாரிகள் திடீரென காணாமற் போய்விட்டனர் என்றும்—

பொலீஸார் தீவிரமாக விசாரணையில் இறங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காலியில் உள்ள "ஓம் ஸ்ரீ கியோ" அமைப்பின் தலைவரான பிக்கு தமக்குப் பாதுகாப்புத் தருமாறு பொலீஸாரிடம் கேட்டுள்ளார்.

விஷவாயு பற்றிய தகவலினால் கிராம வாசிகள் ஆத்திரமுற்றிருப்பதால் தம்மை அவர்கள் தாக்கக்கூடும் என்று [illegible] [அ-ஒ-7-3]


அமரர்

இராமுப்பிள்ளை சிவானந்தன்

அவர்களின்

(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
கல்வி அபிவிருத்தி - வலயம் - 1]

**நினைவுக் கூட்டம்**

இடம்: குமாரசாமி மண்டபம்
(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

காலம்: 05-04 1995 புதன்கிழமை,
பி. ப. 2. 30 மணி

தலைவர்:
அருட்திரு பிரான்சிஸ் யோசெப் அடிகளார்
[தலைவர், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை]

நிகழ்ச்சி நிரல்

ஈகச்சுடர் ஏற்றல்
அமரரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை சூட்டுதல்
அமைதி வணக்கம்
பாவணக்கம்
சங்கீதபூஷணம் திரு. சு. கணபதிப்பிள்ளை
(பி. க. பணிப்பாளர், வலயம் -II)

தலைமையுரை:
அருட்திரு பிரான்சிஸ் யோசெப் அடிகளார்

நினைவுரைகள்:
செல்வி தி. பெரியதம்பி(கல்விப் பணிப்பாளர், வலயம்-I)

அமரர் சிவானந்தனின் 'கண்டறியாதது' நூல் வெளியீடு.

திரு. க. கந்தசாமி (கல்விப் பணிப்பாளர், வலயம்-II)
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை. யாழ் பல்கலைக்கழகம்)
திரு.நா.சுந்தரலிங்கம் (பி.க.பணிப்பாளர்,வலயம்-I)
திரு சி. நாகராசா
(அதிபர், மட்டுவில் தெற்கு. சரஸ்வதி வித்தியாலயம்)
திரு த. மகாசிவம் (செயலாளர், த. ஆ. சங்கம்)
வித்துவான் க.சொக்கலிங்கம் [ஆ.தி.பா.வி.சங்கம்]
திரு ச. சுப்பிரமணியம்
(பி. க. ப திட்டமிடல் வலயம் – I)
திருமதி க. பிரகதீஸ்வர சர்மா (சே. கா. ஆசிரியை)
திரு. வெ. இளங்குமரன்
[பொறுப்பாளர், தமிழீழக் கல்விக்கழகம்]
திரு சு ப தமிழ்செல்வன்
[பொறுப்பாளர் அரசியற்துறை, தமிழீழம்]

ஏற்புரை;
கவிஞர் இ. முருகையன்
[மேலதிகப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்]

நன்றியுரை: செயலாளர், த. க. மே. பேரவை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை

[36060]


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 293/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05 - 04 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org